தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

K. S. Ramu

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 25 புதிய காசு | வெளிநாடு 30 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, புரட்டாசி 10 (26-9-'59). சனிக்கிழமை | இதழ் 15

"தென்றல் உலவும் மாளிகையுடனும், தேன் மணக்கும் சோலையுடனும், சுற்றி வரக் காருடனும், சுகம் தரப் பல விருந்துடனும் உச்சாணிக் கொப்பில் இருப்பவன் நான். ஊரில் உள்ள பதவிகளில் உயர்ந்த பதவி எனக்கு. நானு, தெருக்கூட்டுவது? சே, சே! அது கீழோரின் தொழில்" -இது பெரும் பதவி தரும் மயக்கத்திலே வரும் மொழிகள்.

"நாளுக்கொரு கூட்டமும், வேளைக்கொரு விருந்தும், நிமிடத்திற்கொரு மாலையும் காத்திருக்கின்றன, எனக்கு. ஊருக்கு அறிவுரைக்கும் பெருந் தொழில் எனக்கிருக்க, பிற தொழில்கள் எமக்கெதற்கு? பேசுவதற்கே நேரம்போதவில்லையே, எமக்கு?"-கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றுவதன்றி நாட்டத்தில் கொள்ளாதோரின் பொன் மொழிகள் இவை.

"பகவத் சங்கல்பம் எப்படியோ, அப்படிதான் மனுஷாளின் தொழிலும் அமையும். பிரம்மன் எழுதினதுக்கு மாறு ஏதும் நடக்குமென்று நினைக்கிறீர்? அவனவன் குலாசாரப்படி-தர்மப்படி-உள்ள தொழிலைத்தான் ஓய், பார்த்திண்டிருக்கணும். கேட்டேளோ அவன் சொல்றதை? கழிசடைகள் செய்ற வேலையை நாமும் செய்யணுமாமே! சரிதானு ஓய்?"-இது முப்புரி நூலொன்றிருப்பதால் முன்னுக்கு வந்துவிட்டோரின் "வேத மொழிகள்."

ஆகமொத்தம், உலகெங்கணும் ஓர் எண்ணம் பரவியிருக்கிறது. பணம் படைத்தோரும் பதவி வகிப்போரும், உயர்சாதிப் பிறந்தோரும், கடவுள் அருள் பெற்ரேரும் எனப் பலவகைப்பட்டோர், ஏழையர் செய்யும் தொழில்களை எள்ளி நகையாடுகின்றனர்.

நடப்பதையே மறந்துவிட்ட நல்லவர்கள் பலர் இன்று அமைச்சர்கள் என்ற உருவில் அலைகின்றனர். எங்கு போனாலும் காரில் திரிகின்றனர். அவர்கட்கு ஏழையரைப் பற்றிக் கவலையில்லை. அவர்களில் பலர் முன்னர் ஊர் ஊராய்ச் சுற்றிக் கீழான நிலையில் கிடந்ததை மறந்துவிட்டனர் போலும். பாழான குடிசையில், தேளான வறுமை கொட்டக் கொட்ட, அவர்கள் வாடிய காட்சிகள் உலகத்தின் கண்களில் பட்டுத்தான் இருக்கின்றன. ஆனாலும் பதவி எனும் உச்சாணிக் கொப்புக்கேறியதும் அவர்கள் போடும் கும்மாளங்கள்... அப்பப்பா...சொல்லமுடியாது; எழுதி மாளாது.

இந்தக் கசப்பான உண்மைகள் மக்கள் மனதில் நன்கு தைக்கின்றன என்பதை அறிந்ததும், "பாரத புத்திரர்கள்" பல உருமாறினர்.

ஆச்சாரியார் "குலதர்ம"த்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். ஆனாலும், "சூத்திரனுக்கு உரிய ஏரோட்டும் தொழிலைத் தானும் செய்து சிறப்பிப்பதாகக் காட்டக் கருதினர். தான் ஏரோட்டுவதைப் படம் பிடித்துக்காட்டினார் ஊருக்கு. ஊரார்; அப்படத்தைக் கண்டு, அவரின் அறியாமையை அறிந்தனர் எள்ளி நகையாடினர். ஆமாம்! "எந்த உழவன் இந்த நாட்டில் செருப்புடன் வயலில் இறங்கினன்?" என்று கேள்வி கேட்டனர்.

காரிலும் புகைவண்டியிலும் "பாத யாத்திரை" புறப்பட்ட அமைச்சர் பெருமக்களையும், விநோபாவே வந்த நாளில் மட்டும் சர்வோதயத் தொண்டு செய்யப் புறப்பட்ட வீராதி வீரர்களையும் நாம் அறிவோம்; நாடும் அறியும்.

இவர்களுக்கெல்லாம் அறிவுரைக்கும் முறையில் ஒரு நல்ல செயல் நடந்திருக்கிறது, கடந்த திங்கள். ஆனல் அது இங்கல்ல; சிங்கப்பூரில்.

தி. மு க. தொண்டர்கள் எத்தொழிலுக்கும் சளைக்காது ஈடுபடுவதைக் கண்டிருக்கிரேம். காஞ்சித் தண்ணீர்த் திட்டத்திற்குத் துணையாக வாய்க்கால் வெட்ட வேண்டுமா? நம்தொண்டர்கள் நின்றனர்முனைந்து. மதுரை-திடீர் நாளில் வெள்ளமா? நம் புரட்சி நடிகரும் பிறரும் முனைந்து நின்று, துன்பப்பட்டோருக்கு உதவினர்.

தொத்துநோய்கள் பரவினவா? எல்லா வழிகளிலும் நம்தொண்டர் உதவினர்; கண்டோம்.

ஊருக்குப் பொதுமன்றம் ஒன்று கட்டும் பெரும்பணியா? முன்னிற்பதை அறிந்தோம்.

தாயகத்தில் மட்டுமில்லை இந்த உணர்ச்சி. கடல் கடந்தும் நம் கொள்கை முழங்கும் கழகத் தோழர்கள், பொன்னன காலத்தைப் பொதுப் பணிகளில் செலவிடுகின்றனர். கடந்த திங்கள் 2-ம் நாள் சிங்கப்பூரில் ஆளும் அமைச்சர்கள் உண்மையாகவே ஒரு பொன்னன பணியில் இறங்கினர். "நாம் உயர்ந்தோர்; பிறர் தாழ்ந்தோர்!" என்ற ஆணவப் போக்கை விடுத்து மக்கள் அனைவரும் ஒன்று கூடிச் செயல்பட்டனர். சொல்லப் போனல் இங்கேயுள்ள பல அமைச்சர்களைவிட அவர்கள் மிகவும் கற்ரேர். என்ருலும் 1400 தொண்டர்களோடு தாமும் கலந்து கொண்டு அவ்வமைச்சர்கள் பாலம் அமைத்தனர்; பூங்கா அமைத்தனர்; விளையாட்டுத் திடல் கண்டனர். இதில் பெருமைக்குரிய முறையில் நமது சிங்கப்பூர் தி. மு. க. தொண்டர்களும் கலந்துகொண்டு தமது பங்கினைச் செலுத்தியிருக்கின்றனர். இப்படிக் கூட்டு முறையில் எத்தொண்டையும் மேற்கொள்வதன் மூலம், "மக்களிடத்தே ஒற்றுமை உணர்வு, கூட்டு முயற்சி, நாட்டுப் பற்று தன்னலமற்ற தொண்டு ஆகிய நல்ல உணர்வுகளை வளர்க்கமுடியும்!" என்று நாட்டு முன்னேற்ற அமைச்சர் ஓங் எங் குவான் நம்புகிருர். இந்த நல்லெண்ணத்திற்கு உறுதுணையாக நின்ற சிங்கப்பூர் தி. மு. க. பொதுச் செயலாளர் தோழர் சிங்காரவேலன் அவர்கள், படத்தில் இடமிருந்து நான்காவதாக நிற்பதைக் காணுங்கள். இடமிருந்துஇரண்டாவதாக நிற்பவர்தான் அமைச்சர் ஓங் எங்குவான் அவர்கள்.

இந்நிகழ்ச்சியை நமக்குக் குறிப்பெடுத்து அனுப்பியுள்ளார் சிங்கைத் தோழர் ஒருவர்.

இப்போது நீங்களே சொல்வீர்கள், "எத்தொழிலும் இழிவல்ல; இவர் தொண்டும் வீணல்ல!" என்று.

- செல்லையா.

★



★

— 2-ம் பக்கம் பார்க்க —

தமிழில் பெருநூல்கள்.

தமிழில் இன்று ஏராளமாக நூல்கள் வெளிவருகின்றன. பத்தாண்டுகளுக்குமுன்னர் இருந்த நிலைமையைவிட இப்போது நூல்களை வாங்கிப் படிப்போரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது; அதற்கேற்பப் பற்பல துறைகளில் புத்தம்புது நூல்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. ஆனால் பொழுதுபோக்கு நூல்கள் விற்பனையாவதுபோல் விஞ்ஞானம் போன்ற துறைகளில் வரும் நூல்கள் விற்பனையாவதில்லை என்றாலும் அறிவியல், அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் நூல்கள் வெளிவருகின்றனவே, அதையே பாராட்டவேண்டும்.

ஆங்கிலத்தில் ஒவ்வொரு துறையிலும் மட்டுமல்ல. அந்தத் துறையின் ஒவ்வொரு பகுதியைப் பற்றியும் விளக்கும் அரிய ஆராய்ச்சி நூல்கள் நாள்தோறும் வெளிவந்தபடி இருக்கின்றன. ஐம்பது ரூபாய் விலை கொண்ட நூல்கள், அறுபதுரூபாய் விலையுள்ள நூல்கள் பல வெளிவருகின்றன. மூர்ச்சையாகி விழுந்துவிடாதீர்கள்! நூற்றிஇருபது ரூபாய் விலை கொண்ட புத்தகங்கள்கூட வெளிவந்துள்ளன. அத்தனையும் தரம் வாய்ந்த நூல்கள்! பொறியியல் படிக்கும் மாணவனா? இந்த விலையுயர்ந்த நூலைப் படிக்காமல் அவன் தேர்வு பெறமுடியாது! மருத்துவம் படிக்கும் மாணவனா? அவன் இந்த நாற்பது ரூபாய் நூலைப் படிக்கும் முன்னால் தேர்வில் உட்காரமுடியாது! புத்தகத்தின் விலை நாற்பதுரூபாய், ஐம்பது ரூபாய் என்று இருந்து விடுவதாலேயே புத்தகம் தகுதிவாய்ந்ததென்று கூறுவதற்கிடமில்லை. அந்தத் துறையில் அவற்றைவிடச் சிறந்த, தரம்வாய்ந்த நூல்கள் இருக்கமுடியாது என்ற அந்தத் துறை அறிஞர்களே தேர்ந்தெடுத்த நூல்களாக இருக்கின்றன அவை. ஆகவே புத்தகத்தின் விலையாலேயே புத்தகத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டது என்று யாரும் கருத இடமில்லை. புத்தகத்தின் தரம், அளவு, மதிப்பு ஆகிய இரண்டும் சேர்ந்து விலையையும் உயர்த்துகின்றன.

தமிழில் இருபத்துஐந்து ரூபாய்களுக்குமேற்பட்டு ஒரு நூலும் வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை எனக்கு. நானும் எல்லா நூல்நிலையங்களின் பட்டியல்களையும், பத்திரிகைகளில் வெளிவரும் புத்தக மதிப்புரைகளையும், விளம்பரங்களையும் ஒன்று விடாமல் படிப்பதோடு, முக்கியமான நூல்களைப் பற்றிய குறிப்புகளையும் சேகரித்து வைத்து வருகிறேன். எனக்குத் தெரிந்தவரையில் தமிழ்க் கலைக் கலைக்களஞ்சியம் ஒவ்வொரு பகுதியும் 25 ரூபாய்க்கு வெளிவந்திருக்கின்றது. வெளிவர இருக்கின்றன, மேலும் பல பகுதிகள். இருபது ரூபாயில் – அதுகூட அணிமையில்தான்–பாரதியார் நூல் ஒன்று வெளிவந்துள்ளது. இருபதுரூபாய் விலையில் இன்னும் சில நூல்கள் இருக்கின்றனஎன்றும் தெரிகிறது. இருபத்திஐந்து ரூபாய்க்கு மேற்பட்ட நூல்கள் தமிழில் யாதுமில்லை என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. ஆங்கிலத்தில் இத்தகைய நூல்கள் ஏராளமாக இருக்கின்றன; நாள்தோறும் மேலும் மேலும் வந்த வண்ணமிருக்கின்றன. பலப்பல துறைகளைப் பற்றியும் வெளிவந்த வண்ணம் உள்ளன.

சென்ற மூன்றுவாரங்களில் மட்டும் சென்னையிலிருந்து வெளிவரும் புகழ் வாய்ந்த ஓர் ஆங்கில நாளிதழின் புத்தக விமர்சனப் பகுதியிலிருந்து நான் தொகுத்துள்ள ஆங்கில நூல்களிற் சிலவற்றைக் கீழே கொடுத்துள்ளேன். இருபது ரூபாய்க்கு மேற்பட்ட விலையுடைய நூல்கள் இவை, இந்தியாவிலிருந்து வெளி வந்த நூல்களே கொடுக்கப்பட்டுள்ளன. சென்ற மூன்று வாரத்தில் மட்டும் அந்த நாளிதழில் விமரிசனம் செய்யப்பட்டவை. என்றால் மொத்தம் எவ்வளவு நூல்கள் வெளி வருகின்றன என்பதை ஓரளவிற்குக் கற்பனை செய்து பார்த்துக்கொள்ளலாம்.

"நேருவின் அரசியல் வரலாறு" என்ற வரலாற்று நூல் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகத்தாரால் வெளியிடப்பட்டது; மைக்கேல் ப்ரேச்சர் எழுதியது. இந்நூலின் விலை ரூபாய் இருபத்தைந்தாகும். இதில் நேருவின் அரசியல் வாழ்க்கை அந்நாள் தொடங்கி இந்நாள்வரையில் விளக்கப்பட்டிருக்கிறது.

"இந்தியாவிலிருந்து நிழல்கள்" (Shadows from India): இது கட்டடக்கலைத் தொடர்புகொண்ட படங்கள் அடங்கிய ஒரு தொகுப்பு நூலாகும். ரோடரிக் கெமரான் என்பாரின் அரிய முயற்சி; வெளியிட்டவர் டி. பி. தாராபூர் வாலா என்பவர். விலை ரூபாய் நாற்பத்தொன்பதுதான்!

"சுல்தான்களின் கீழ், காஷ்மீர்" (Kashmir under the Sultans) என்ற வரலாற்று நூலில் காஷ்மீரை 1339 முதல் 1586 வரை ஆண்ட சுல்தான்களின் வாழ்க்கையும், ஆட்சிக் குறிப்புகளும் காணப்படுகின்றன. இந்நூலை எழுதியவர் மொஹிபுல்ஹஸன் என்பார் ஆவார். வெளியிட்டது கல்கத்தாவில் உள்ள ஈரான் சொசைட்டி இதன் விலை இருபத்தைந்து ரூபாய்களே!

"பாமரின் கம்பெனிச் சட்டம்" (Palmer's Company Law) என்ற நூலில் கம்பெனிகள் இயங்கும் விதத்தைக் குறித்த சட்டங்களும், அவைகளைப் பற்றிய விளக்க உரைகளும் காணப்படுகின்றன. இந்த நூலைத் தொகுத்தவர்கள் ஸ்க்மிதாப்பும் கர்ரியும் ஆவர். இது இந்தப் புத்தகத்தின் இருபதாவது பதிப்பாகும். (நம் நாட்டில் ஒரு புத்தகத்தின் முதல் பதிப்பு முற்றும் செலவாகி, இரண்டாவது பதிப்பு வெளிவருவது எத்தனை கடினம் என்பது எழுத்தாளர்களுக்கும், பதிப்பாளர்களுக்கும் மட்டுமே தெரிந்த ஒரு சேதியாகும்.) இந்தப் புத்தகத்தின் விலை தொண்ணூறு ரூபாய்களாம்!

தத்துவம் பற்றிய ஒரு நூலை அண்மையில் மக்கள் பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். 'லோகாயதா' என்பது நூலின் பெயர். எழுதியவர் தேவிபிரசாத் சட்டோபாத்யாய என்பவர். இதில் தத்துவத்தைப் பற்றிய இந்தியரின் எண்ணங்கள் விளக்கப்பட்டுள்ள. இதன் விலை இருபத்தேழு ரூபாய், ஐம்பது புதுக்காசுகளாம்!

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் எப்படித் தோற்றுவிக்கப்பட்டது, எப்படி, யாரால் வளர்ந்தது, இன்று அதன் நிலைமையாது முதலிய விவரங்களைக் கூறும் ஒரு நூல் அண்மையில் வெளிவந்துள்ளது 'இந்தியாவில் கூட்டுறவு இயக்கம்' என்பது அதன் பெயர். எழுதியவர் எலியனூர் எச். ஹக் என்பார்; ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக அச்சகத்தார் வெளியிட்டது. இதன் விலை இருபது ரூபாய்களே!

"குறைந்த வருவாய் உள்ள நாடுகளில் மக்கள் தொகை பெருக்கமும், பொருளாதார வளர்ச்சியும்" (Population growth and economic development in low income countries) என்பது அதே பதிப்பகத்தார்வெளியிட்டுள்ள மற்றொரு நூலாகும். இதன் விலை ரூ இருபத்தைந்து. இந்தப் பொருளாதார நூலில் அதிக வருமானம் இல்லாத நாடுகளில் மக்கள் தொகை எப்படி வளர்கிறது என்பதும், பொருளாதார வளர்ச்சி எப்படி ஏற்படுகிறது என்பதும் விளக்கப்பட்டுள்ளன. இதன் ஆசிரியர்கள் அன்ஸ்லிகோலும், எட்கார் ஹூவரும் ஆவர்.

"19-வது நூற்றாண்டில் இந்தியாவின் வடகிழக்கு எல்லை" (India's north-east frontier in the 19th Century) என்கிற நூலில் வெரியர் எல்வின் என்பார் பத்தொன்பதாவது நூற்றாண்டில் இந்தியாவின் வடகிழக்கெல்லை எப்படி இருந்தது என்பதையும், எதிரிகளின் படையெடுப்பைத் தடுக்க எந்தெந்த வகையில் அது பலம் வாய்ந்ததாக இருந்தது என்பதையும் விளக்கியுள்ளார். இதன் விலை இருபத்தெட்டு ரூபாய்களே!

"அதிக வளர்ச்சியுறாத பொருளாதாரத்தில் விவசாய நிலங்களின் வரி விதிப்பு" (Taxation of Agricultu-ral land in under-developed economics) என்ற நூலில் ஹஸ்கல் வால்ட் என்பார் பலவிதமான விவசாய வரி விதிப்புத் திட்டங்களை விளக்கமாகக் கூறி, அவற்றில் எவ்வாறு சீர்திருத்தங்கள் செய்யலாம் என்பதையும் விளக்கியுள்ளார். இதுவும் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழக அச்சகம் வெளியிட்டதே. இந்த நிலையத்தார் ஆங்கிலத்தில் தரமான நூல்கள் வெளியிடுபவர்கள்என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த நூலின் விலை இருபத்திரண்டு ரூபாய் ஐம்பது காசுகளாம்!

"இந்தியச்சணல் விளைவு" என்ற நூலில் எப்படி இந்தியா சணலைக் கொண்டு உலகத்தை வளைத்து வருகிறது என்பதும் இந்தியாவில் சணல் உற்பத்தி எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது என்பதும் விளக்கப்பட்டுள்ளன. இதை ஸென்குப்தா என்பவர் எழுதியுள்ளார். ஓரியன்ட் லாங்மன்ஸ் வெளியிட்டுள்ள இந்நூலின் விலை இருபது ரூபாய்களாகும்.

வரலாறு, பொருளாதாரம், சிற்பக்கலை, தத்துவம், பூகோளம், முதலிய பலதரப்பட்ட துறைகளிலும் வந்த நூல்கள் மேற்கூறியவை. இன்னும் விஞ்ஞானத்தைப் பற்றிய நூல்கள் அங்கு கரையிலாத கடல்போல் விரிந்து பரந்துகிடக்கின்றன. சென்ற மூன்று வாரங்களில் வெளிவந்த நூல்கள் மட்டும் இவை; என்றால் மொத்தம் இதுவரை எத்தனை நூல்கள் வெளிவந்திருக்கும் என்பதைக் கூறத் தேவை இல்லை.

இத்தகைய பல்கலைகள் தொடர்புகொண்ட நூல்கள் தமிழில் நிறைய வெளிவரவேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டுத்தான், ஆங்கில இலக்கியத்தின் ஒரு கோடியைக் கோடிட்டுக் காட்டத்தான் இச்சிறு கட்டுரை வரைந்தேன். பழம் பெருமை பேசிக்கொள்வதையும், அதைப்பற்றிய நூல்களை எழுவதையும் சிறிதுகாலம் மூட்டை கட்டிவிட்டுப் புத்தம்புதுக் கலைகளைப் பற்றிய நூல்கள் எழுத அறிஞர்கள் முன்வரவேண்டும். சணலைப்பற்றிய நூல் இருபதுரூபாய் விலையில் தமிழில் வரும் நாள் எந்நாள்? காவேரி நதியின் பெருமைகளைப்பற்றி முப்பது ரூபாய் விலையில் வெளிவரும் நாள் எந்நாள்? தமிழகத்து மண்வளம்பற்றிய நூல் நாற்பது ரூபாய் விலையில் வரும் நாள் எந்நாள்? இன்னும் பிற பிற துறைகளில் இத்தகைய விலையுயர்ந்த நூல்கள் வரும் நாளே தமிழிலக்கியத்தின் பொன்னாளாகும். நான் முன்னரே குறிப்பிட்டதுபோல் புத்தகத்தின் மதிப்பு விலையில் மட்டும் இல்லை; பக்கங்களில்மட்டும் இல்லை; தரத்திலும் இருக்கிறது. அந்தப் பொன்னாள் விரைவில் வருவதாகுக.

—நாநிலத்தலைவன்.

சம்பத்துக்குத் தடையா?

— முதல் பக்கத் தொடர்ச்சி —

இப்படி தி. மு. கழகத்தாரின் பொதுப்பணி உணர்வை நன்கு அறிந்த சிங்கப்பூர் அமைச்சர்கள்தான், சொல்லின்செல்வர் சம்பத் அவர்கள் வருவதைத் தடைசெய்திருக்கின்றனராம். தி. மு. க. ஒரு பயங்கர இயக்கம் என்று எவரோ கட்டிவிட்ட கதைகளை, நம் தோழர்களோடு நன்கு பழகியறிந்தோரான அவ்வமைச்சர்களே நம்பிவிட்டது விந்தையே. தி. மு. க. தனது தாயகப் பிரிவினைப் போருக்கு எப்படிப் பிறநாட்டிலுள்ளோரைப் பயன்படுத்திக் கொள்ளும்? நம்வழி நடக்கின்ற அத்தோழர்களும் தாம் வாழும் நிலத்திற்கு எத்தகைய துன்பத்தையும் தர விரும்புவோரல்லர்; தாயகப் போராட்டத்திற்கு மன ஆதரவு தருவதோடு அவர்கள் அமைந்துவிடுகின்றனர். இவற்றை நன்குணர்ந்தோரும், தாம் மேற்கொண்ட பொதுப்பணிகளில் சிங்கை தி. மு. க. தொண்டர்களின் பணியும் தேவை என்றெண்ணி அழைத்துக்கொண்டோரும் ஆன சிங்கை அமைச்சர்கள் சம்பத் அவர்கட்கு விதித்த தடை தவறானதே. இன்று விதித்த தடைகட்கு, நாளை சிங்கை அமைச்சர்கள் வருந்தியே தீருவர். மலாயா நிலையும் அதுவேயாகும்.

எப்படி அவர்கள் செய்த பொதுப்பணிக்கான தொழில்களில் இழிவில்லையோ, அப்படியே தி. மு. கழகத்தினர் மேற்கொண்ட தொண்டுகளும் வீணாகப் போவதில்லை. இன்று சப்பத்துக்குத் தடை விதித்தோர் நாளை தம் தவறை உணர்ந்தே தீருவர். ஏனென்றால், அந்த அமைச்சர்கள் விடுதலையின் பொருள் அறிந்தோரல்லவா!

★

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 26—9—'59 | இதழ் 15

பாகல்மேட்டுப் பகல்கூத்துக்காரர்களுக்கு...

பூவிருந்தவல்லி நமக்குப் பல புதிய உண்மைகளைச் சொல்லித் தந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக மறவர்கட்குப் புத்துரமும் பெரு வலிவும் கிளம்பியிருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டக் காங்கிரசார் மிக்வும் முயன்றனர், மாநாட்டைத் தடைப்படுத்த. "கொளுத்தி விடுவோம்; பொசுக்கி விடுவோம்!" எனப்பலர் ஆர்ப்பரித்துக் கிளம்பியும், மாநாடு சீருடனும் சிறப்புடனும் நடந்து வெற்றி கண்டிருக்கிறது. அல்லும்பகலும் உழைத்து, செல்லும் இடமெல்லாம் தொண்டர் பலரை ஈர்த்து, இந்த வெற்றியை ஈட்டிய தோழர்கள் சம்பந்தம், அண்ணாமலை, வகாப், இராசரத்னம், போரூரான், சக்ரபாணி, சின்னச்சாமி, கோபால், அரங்கநாதன் முதலிய அனைவரும் திராவிடத்தின் பாராட்டுக்குரியோர் ஆவர். **அறிஞர் அண்ணா அவர்கள்** இம்மாநாட்டின் பொருளாளராக இருந்து, அவ்வப்போது வழி காட்டியும் ஊக்கமூட்டியும் ஆற்றிய அரும்பணிகள் மறப்பதற்கியலாதன. இவர்களுடையவும், இன்னும் பன்னூறு தொண்டர்களுடையவுமான உழைப்பால் கடந்த 12, 13-ம் நாள்களில் நடந்தேறிய பூவிருந்தவல்லி மாநாடு கண்ட முடிவுகள் பலப்பல.

காமராசர் பெரும் சாகசக்காரர்; எதிரிகளையும் சிரித்து மயக்கி வலைக்குள் போட்டுக்கொள்வார்; ஏழைகளுடன் இரண்டறப் பழகிக் கலந்து எல்லோரையும் தன் வசமாக்கிக்கொள்வார். அவரை வெல்லல் யார்க்கும் அரிது—இப்படிப் பல நூறு பெருமைகளை உருவாக்கிக்கொண்டவர் காமராசர். அவர் உருவாக்கிக்கொண்ட பெருமைகள் அனைத்தும் பகல் வேடங்கள் என்பதைக் காட்டாமல் காட்டிவிட்டார் அண்ணா அவர்கள். காமராசர் இந்த முறை பதவிக்கு வந்ததும், சமுதாய நலத்திட்டத் துறையைத் தனக்கு எடுத்துக் கொண்டார். அதில் விரைந்து செயல்படுவதாகக் காட்டிக்கொள்ள, பாகல்மேடு எனும் ஊரில் பகல் கூத்து நடத்தினார். ஓரளவு ஊரார் கண்களையும் கட்டிவிட்ட மனநிறைவோடு, காமராசர் வேறு வேலைகளில் இறங்கினார். ஆனால் அண்ணா அவர்கள், காமராசர் முகமூடியைக் கிழித்தெறியும் நோக்கோடு, தமது தொகுதியிலுள்ள **தண்டலம்** எனும் சிற்றூரில் ஒரு **பொதுநல மாநாட்டைக்** கூட்டினார்கள். அதற்கு காமராசரை அழைத்து வந்து, கிராம மக்களின் குறைகளைக் கேட்கச் செய்தார்கள். காமராசரிடம் தொகுதியின் தேவைகளைக் குறிக்கும் 100-க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் தரப்பெற்றன. அவற்றை வாங்கி வைத்துக்கொண்ட காமராசர், வழக்கம்போல் "கவனிக்கலாம்! பார்க்கலாம்!" என்று கூறிச் சென்றார்கள். ஆனால் இதுவரை யாரையும் பார்க்கவில்லை. வசதியற்று வாடும் மக்கள்தான் வானத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இன்று, செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் அமைச்சராகவும் இருக்கிறார். என்றாலும் அந்த மாவட்டத்தின் தேவைகள் கவனிக்கப்படவுமில்லை; பார்க்கப் படவுமில்லை. ஆனாலும் காமராசர் செல்லுமிடமெல்லாம், கவனிப்பதாகவும் பார்ப்பதாகவும் கூறி ஏமாற்றுவதைக் காட்டவே, அண்ணா அவர்கள் தண்டலம் மாநாட்டைக் கூட்டிக் காட்டினார்கள். அது நடந்து ஆண்டும் ஒன்றுக்கு மேலாகிவிட்டது. ஆனாலும் கண்ட பயன் ஒன்றுமில்லை. அதனால் காமராசர் "வாய்வீச்சு", எவ்வளவு மோசடியானது என்பதை ஊரறியும் ஒரு வாய்ப்பை உண்டாக்கிவிட்டது, தண்டலம் பொதுநல மாநாடு.

ஆனால் அத்தோடு அமைந்துவிட்டால் மக்கள் தங்கள் தேவைகளை அடைவது எங்ஙனம்? அதற்கான வழியாக, பூவிருந்தவல்லி மாநாடு பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

கிராம மக்களின் தேவைகளை நேரடியாகக் கண்டறிந்து உடனடியாகத் தீர்த்து வைப்பதாக விளம்பரப்படுத்தி முதலமைச்சரைக் கொண்டு நடத்தப்பட்ட பாகல்மேட்டுக் கூட்டம் வெறும் கேலிக் கூத்தாகிக் கைவிடப்பட்டது கண்டும், கட்சிப்பாகுபாடு பார்க்காமல் நடத்தப்பட்ட தண்டலம் பொதுநல மாநாட்டில் முதலமைச்சர் கொடுத்த வாக்குறுதிகள் யாவும் வெறும் பேச்சாகிப் போனதைக் கண்டும், செங்கற்பட்டு மாவட்ட மக்கள் மனம் குமுறிக் கிடப்பதுடன், தமது தேவைகளை காங்கிரசு அரசு மேலும் நிறைவேற்றாமல் இருக்குமானால், கிராம மக்கள் தங்கள் உரிமைகளுக்காகவும், வசதிகளுக்காகவும், கலெக்டர் அலுவலகம் முன்பு மறியல் செய்வதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபட வேண்டி நேரிடும் என்று இம்மாநாடு மாநில அரசுக்கு வலியுறுத்திக் கூறுகிறது.

இத்தீர்மானத்தை முன் மொழிந்து பேசினார் தோழர் குலசேகரன். இதனை வழி மொழிந்து பேசினார் தண்டலத்தைச் சேர்ந்த தோழர் நைனா முகமது. அவர் பேசும்போது காட்டிய ஆர்வமும், எடுத்து வீசிய ஆதாரக் கணைகளும் மாநாட்டுக்கு வந்திருந்த அனைவரையும் கவர்ந்துவிட்டன. அவர் மறியலின் அவசியத்தை விளக்கியுரைத்தபோது, மக்கள் கேட்டுத் தமது ஆதரவைக் கைதட்டல்மூலம் காட்டினர். காமராசர் இனியும் கவனிப்பதிலேயே இருந்தால், நம் கணிப்பு வேறு வழியில்தான் திரும்பும். இது உண்மை; உறுதி.

காங்கிரசாட்சியில் பால் ஆறு ஓடாவிட்டாலும், காஞ்சிபுரம் பாலாற்றிலும் ஓடக்கூடாதா? கனம் 'கவனிக்கலாம்", இதையாகிலும் கவனிக்கக் கூடாதா?—இது மற்றொரு தீர்மானம் விடுக்கும் வினா.

இப்படிப் பல தீர்மானங்களை நிறைவேற்றியதைக் காங்கிரசார் செய்தித்தாள்கள் மூலமும், ஒற்றர்கள் மூலமும் அறிந்திருப்பர். இவற்றிற்கு அவர்கள் தரப்போகும் பதில்கள் யாவை? ★

வாழ்க! வாழ்க!

15-7-'59 அன்று மண்ணிவாக்கம் கிராமத்தில் பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ. தலைமையில் தோழர் **சண்முகம்**, தோழியர் **சமுனா**பாயை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். **அறிஞர் அண்ணா** முதலிய பலர் வாழ்த்துரைத்தனர். "தென்றல்"லும் வாழ்த்துகிறது. வாழ்க! வாழ்க!

மணமடல்

அன்புடையீர்,

வணக்கம். நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1990 புரட்டாசித் திங்கள் 18-ஆம் நாள் (4-10-'59) ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணி அளவில்,

செல்வன் :

ப. புகழேந்திக்கும்

செல்வி :

சுகுணாவுக்கும்

சென்னை, தியாகராயநகர், பிரகாசம் ரோடு, 5-ம் இல்லத்தில்

அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் திருமண விழாவிற்குத் தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

சென்னை-17
20-9-'59.

அன்பன்,
கண்ணதாசன்

சுந்தரனாரும் சுப்பிரமணியரும்

கவிஞனாய்ப் பிறந்தாலும் "அவாளாய்ப்" பிறக்கவேண்டும்

செங்கல்லை அடுக்கினாலும் சிறப்புப் பெறலாம் முப்புரிநூலிருந்தால் மூலைக்கொரு மன்றம் எழும்

"இது வரை என்னென்னவோ இலக்கியங்கள் இருந்தன; ஆனால் தமிழிலக்கிய வரலாற்றின் ஒளிமிக்க பாதைக்கு வழி கோலியவர் அமர கவி சுப்பிரமணிய பாரதியார்தான்"– இப்படி 'விஷமதானம்' செய்யும் சில பத்திரிகை ஆசிரியர்கள் ஓயாமல் எழுதி வருகிறார்கள்.

"எங்கள் நாட்டில் தமிழ் மொழி என்று ஒன்று இருக்கிறது. அதற்கு மதிப்பூட்டுவதற்கு இரண்டே இரண்டு தலை சிறந்த இலக்கிய ஆசிரியர்கள் எங்களிடம் தோன்றினார்கள்; ஒருவர் கம்பநாட்டாழ்வார்; மற்றவர் மகாகவி பாரதியார்"– இப்படி ஆசிய எழுத்தாளர் மாநாட்டில் தமிழகத்தின் சார்பில் கலந்துகொண்ட பேராசிரியர் ஒருவர் துணிந்து பேசிவிட்டு வந்தார்.

இம்முறைகளில் எல்லாம் தொல்காப்பியனுக்கும் இளங்கோவுக்கும் கொடுக்க விரும்பாத பெருமதிப்பை, பாரதியின் பாதங்களில் கொண்டு போய்க் கொட்டுகிறார்கள் ஒரு சிலர். அதன் காரணமாக வடநாடு சென்றாலும், வேறு இடங்களுக்குச் சென்றாலும் பாரதியைப்பற்றித்தான் மிகுதியாகக் கேட்கிறார்கள்.

இதைக் கூறுவதால் யார் யாரோ பாரதிக்குப் புகழ் மாலை சூட்டுவதை நாம் இடையில் நின்று தடுக்கிறோம் என்று எவரும் எண்ணத் தேவை இல்லை.

ஆனால் பாரதி உழுததுதான் புது நிலம்; அவன் செம்மைப்படுத்தித் தராவிட்டால் தமிழ் இலக்கிய வயலில் யாரும் இறங்கி வந்து, பயிரிட்டு அறுவடை செய்யமுடியாது என்று நாவலிக்கக் கூறுவோர்க்கே, இந்தக் கட்டுரையைக் காணிக்கையாக்க வேண்டியிருக்கிறது.

என்றோ சங்க காலத்தில் அல்லது இடைக் காலத்தில் வாழ்ந்த நக்கீரருக்கும், கபிலருக்கும், கூத்தருக்கும் பாரதியை ஒப்பிட்டுக் காட்டி, "பாருங்கள், பாரதி இவர்கள் செப்பனிட்டு வைத்த பாதையில்தான் சென்றிருக்கிறார்" என்று குற்றச் சுமையை அவர் தலைமீது சுமத்த நாம் முன் வரவில்லை.

ஆனால் பாரதி, ஏறத்தாழ தன் காலத்திலேயே வாழ்ந்தஒருநூலாசிரியரின்–பேராசிரியர் சுந்தரனாரின்–கருத்துக்களை அப்படியே நகல் செய்திருக்கிறார் என்பதைத்தான், அந்தச் 'சங்கம்' நடத்தும் எழுத்தாளர் பெருமக்களுக்கு உணர்த்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

மலையாளப் பகுதியிலே பிறந்து, ஆங்கில இலக்கியச் சூழலில் மூழ்கிக் கிடந்த, பேராசிரியர் சுந்தரனார் தன் நாடகத்தைத் தொடங்கும்போதே,

"ஆரியம்போல் உலகவழக்
  கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து
  செயல்மறந்து வாழ்த்துதுமே"

என்று செந்தமிழன்னையின் சீர்பாடித் துவக்குகின்றார்.

ஆனால் தமிழ் மண்ணிலே பிறந்து, தமிழரிடையே வாழ்ந்து, தமிழ் மண்ணிலே மடிந்த பாரதி வடவாரியப் பாஞ்சாலியின் பெருமையைப் பாட எடுத்துக்கொண்ட கதையிலும், பிரம "ஸ்துதி"யையும், சரஸ்வதி 'ஸ்துதி"யையும் முதலில் பாடி, பின்னரே ஹஸ்தினாபுரத்தின் சிறப்பைக் கூறத் துவங்குகிறார்.

இது கிடக்கட்டும்!

பாரதி தொட்டதெல்லாம் 'வண்டு மூசாத மலர்கள்' என்று வாய்ப்பந்தல் போடுகின்ற நண்பர்களுக்கு, போர் உரைபற்றிய, சுந்தரனார் சீவகன் வாயிலாகத் தரும் சொற்களையும், பாரதி, சிவாஜி வாயிலாகத் தரும் சொற்களையும் மட்டுமே சீர்தூக்கி நோக்குமாறு வேண்டுகிறோம்.

தென்பாண்டி நாட்டின் தினவெடுத்த வீரரைப் பற்றிக் கேள்வியுறாத சேரன் புருடோத்தமன் படை கொண்டு வருகிறான்; சேதி கேட்ட சீவகன் தன் நாட்டு வீரர்களை ஒன்று கூட்டி அவர்களின் குருதி நாளங்களில் சூடேற்றுகிறான். இது சுந்தரனார் தீட்டும் சொல்லோவியம்!

இதேபோல் சுதந்திர • தேசிய விடுதலைப் பாடல் பாடவந்த பாரதி, சிவாஜி தன் "சைனிய"த்தைக் கூட்டி அவர்களை விரட்டும் நோக்குடன் பாடிய பாரதி தான் பேசுவதற்கு, தேடிப்போய் சிவாஜியையா தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூட நாம் ஆராயப்போவதில்லை.

ஆனால் அப்படி எழுத வந்த பாரதி சுந்தரனாரின் அடிச்சுவட்டில் கொஞ்சமும் பிறழாமல் பற்றிச் செல்வானேன்? சிறிதுகூட மற்றவரின் கற்பனையைத் தொடாத சிந்து கவிக்குத் தடுமாற்றம் ஏற்பட்டது ஏன் என்றுதான் நம் சிந்தை குழம்புகின்றது!

சுந்தரனார் காட்டும் சீவகன், படை வெள்ளத்தைக் கூட்டி,

"வேற்படைத் தலைவரே!
  நாற்படையாளரே!
கேட்பீர் ஒரு சொல்..."
  என்று தொடங்குகிறான்.

ஆனால் இதேபோல் தொடங்கும் பாரதியின் சிவாஜி, இதையே விரிவுபடுத்தி,

"சேனைத் தலைவர்காள்!
  சிறந்த மந்திரிகாள்!
ஆனைத் தலைவரும்
  அருந்திறல் வீரர்காள்!
அதிரத மன்னர்காள்!
  துரகத்ததிபர்காள்!
எதிரிகள் துணுக்குற
  இடித்திடு பதாதிகாள்!"

என்று நீட்டி முழக்கி, 'நாற்படையாளரே!' என்று சுந்தரனார் ஒரே சொல்லில் தேக்கித் தந்த கருத்தை நான்கு வரிகளில் 'இரப்ப'ரைப் போல் இழுத்துவிடுகிறார்!

பின்னர் சீவகன், தன் நீரால் வீரமூட்டிய அன்னை தாமிரவருணியின் சீரினை எடுத்துக்கூறி, அவ்வாறு பகைவரால் தீண்டப் பெறுதலும் கூடாது என்று வற்புறுத்துகிறான்! இவ்வுரையில் இயற்கைப் பாசமும் அழியாத பற்றும் வெளியாகின்றன.

"அன்னியன் கைப்படா
  இந்நீர் கற்பிற்கு
இழிவுறின் மார்பினின்றி
  துவே சோரியாய்ப்
பொழிகநீர் பொன்றிடும்
  அளவும்!"

என்ற வரிகளால் சீவனும், அவன் படை வீரரும் தாய்நாட்டு மண்ணில் ஓடும் ஆற்றின்மீது கொண்டுள்ள வற்றாத காதலை அறிகின்றோம்.

இதே கருத்தமைய, தென்பாண்டி நாட்டு எட்டயபுரத்திலே பிறந்த பாரதி பாடுகிறார். இன்னும் புதுமை இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதில் நியாயம் இருக்கிறது.

ஆனால் அவர்,

"வேதநூல் பழிக்கும்
  வெளித்திசை மிலேச்சர்
பாதமும் பொறுப்பளோ
  பாரத தேவி"

என்று அதே அடிச்சுவட்டில் கொண்டுபோய்ப் பாரததேவியுடன் முடித்துவிடுகிறார்.

ஆடும் மாடும்கூடக் கால்வைத்துக் குடிக்கும் தாமிரவருணி நீரை, மனிதரான பகைவர் மட்டும் கையாலும் தொடக்கூடாது என்று வீரமொழி பேசுகிறான் சீவகன்; இதில் கற்பனை யாழம் இருக்கிறது.

ஆனால் "பாரதமாதாவின்மேல் பாதம் படலாமா?" என்று மட்டும் நிறுத்திக்கொள்கிறான் சிவாஜி!

மேலும் பாருங்கள்.

தமிழர் சுந்தரனார், தம் நாவும் எண்ணமும் உறங்குகின்ற தமிழின் மீது கொண்டுள்ள பாசத்தை சீவகன் மூலம் வெளிப்படுத்துகிறார்.

"பகைவர்கள் தென்பாண்டி மண்டலத்தை வென்றுவிட்டார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; அப்போது அவர்கள் நாம் பேசும் பைந்தமிழைத் தம் வாயால் பேசுவார்களே! அப்படிப் பேச விடலாமா?" என்று இடிமுழக்கம் செய்கிறான் சீவகன்!

"விந்தம் அடக்கினோன்
  தந்தநற் றமிழ்மொழி
தற்சுதந்திரமறும் அற்பர்
  வாய்ப் படுமோ?"

என்று கூறுகிறான்; இந்தக் கேள்வியில் உரிமை எழுச்சியின் மொத்த உருவமும் அடங்கிக் கிடக்கிறது.

இந்த அழகான கருத்தைத் தழுவி எழுத வருகிறார் "தெய்வக்கவி" பாரதி; அவர்தம் சிந்தனையூற்றில் புதுமை தேங்கி நிற்கும் என்று ஏங்கி நிற்கிறோம் நாம்!

ஆனால் அவர் பாடுகிறார்.

"தேவர்கள் வாழ்விடம்
  திறலுயர் முனிவர்
ஆவலோ டடையும்
  அரும்புகழ் நாடு
....
நீரதன் புதல்வர்!
  இந்நினை வகற் றாதீர்!"

இந்த அடிகளைப் போர் வீரர்கள் கேட்கிறார்கள். 'தேவர்கள் வாழும் இடத்தில் சின்னாபின்னமாக்கும் போர் ஏற்படுவானேன்? முனிவர்கள் வாழும் இடத்தில் சண்டை மூள்வானேன்? இவர்களெல்லாம் வாழ்ந்தும் இவற்றைத் தடுக்காதது ஏன்?' இம்முறையில் வேல்தூக்கிவந்த போர் வீரர்களில் ஒருவனேனும் கேட்க மாட்டானா? ஆனால் இதைப் பற்றியெல்லாம் இந்த இடத்தில் பாரதியின் 'பக்தி யுணர்ச்சி' கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

அடுத்து பாரதி இப்பாடலில் கையாண்டுள்ள ஒரே ஒரு உவமையைக் கண்டு மகிழும் நாம், அது அவரே கற்பனை செய்ததுதானாஎன்று தேடிப்பார்த்தால், முடிவில் ஏமாற்றத்தைத்தான் தழுவவேண்டியுள்ளது. ஏனெனில் அதுவும் சுந்தரனார் கையாளும் உவமைகளில் ஒன்றாகவே போய் முடிகிறது.

இப்படி எடுத்துக் கையாளும் உவமையிலேனும், புது மெருகையும் புத்துருவையும் தருகிறாரா பாரதி என்றால், உறுதியாக இல்லை! அந்தப் "புதுமைக்கவி" அரைத்த மாவையே அரைத்து, அதே வட்டிலில் இட்டு, அரைவேக்காட்டுச் சரக்காக நம் முகத்திலே நீட்டுகிறார்!

— 10-ம் பக்கம் —

பாரதியைப் பற்றி ஒரு பேராசிரியர் தந்த கருத்துக்கு, தோழர் வேழவேந்தன் தரும் மறுப்பு இது. "பாரதிக்கு மதிப்புத் தரவேண்டும் என்பதற்காகப் பிறரைப் பழிப்பதா?" – இது அவரின் வினா. எதிர்ப்போர் எழுதுக.

— ஆ–ர்.

சென்னை மாவட்ட
தி. மு. க.
3-வது மாநாடு.

★

தொண்டர் படையில் சேர விரும்புவோருக்கு:

"சென்னை மாவட்ட தி. மு. கழக மூன்றாவது மாநாட்டுத் தொண்டர் படையில் சேர விரும்புவோர், அந்தந்த வட்டச் செயலாளர் ஒப்புதலுடன், கீழ்க்காணும் முகவரியில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முகவரி: 'அறிவகம்'
இராயபுரம்,
சென்னை-13"

என்று தொண்டர் படைத் தலைவர்

தி. சு. நல்லதம்பி
எம். சி.

அவர்கள் அறிவிக்கிறார்கள்.

எங்கணும் கழக முழக்கம் எப்புறமும் கொள்கை விளக்கம் மாணவரும் நம் அணிவகுப்பில் என். ஜி. ஓவும் அவ்வழியே

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடத்தின் விடுதலைப் போரியக்கம், திராவிட மக்களின் வாழ்வும் தாழ்வும் முன்னேற்றக் கழகத்தின் வலிவிலும் வளர்ச்சியிலும்தான் இருக்கிறதென்பதை கழிந்து போன பத்து நாட்களாக நடைபெறும் பத்தாம் ஆண்டு நிறைவு விழாக் கூட்டங்கள் மிக மிக உறுதிப்படுத்தி உணரும் திறன் பெற்றோருக்கெல்லாம் உணர்த்தியுள்ளன. தமிழகத்தின் எல்லாக்கிளைகளும்-கிராமத்திலிருந்து பெரு நகரப் பகுதிகள் இறுதியாக நாட்டுப் பிரிவினை கோரும் முழக்கத்தினையும் விடுதலை உணர்ச்சி வேகத்தையும் ஒன்றாக இணைத்துக்காட்டிக் கழகத் தோழர்களும் ஆதரவாளரும் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வேண்டுகோளுக்கிணங்க இதயத்து ஆசைகளையெல்லாம், இலட்சியமாக-இயக்கத்தின் உயிர்நாடியாக வளர்த்திருக்கும் கழகத் தோழர்கள் தங்களின் வசதிகள் தேவைகளையெல்லாம் மறந்துவிட்டுப் பிரிவினை வார விழாவின், பத்தாம் ஆண்டுச் சிறப்பினை எல்லாவகையிலும் புகழேற்றித் தந்துவிட்டார்கள்! மில் முதலாளிகளிடம் மொத்தமாக 'செக்' வாங்கிடும் தோழர்கள், நம்முடைய முன்னேற்றக் கழக விழாவுக்கு எதிர்பார்க்கப்படும் நிலை எங்குமில்லை? ஊர் சுற்றி உண்டியல் குலுக்குவதற்கென்றே ஒரு கட்சி இருக்கிறது. நாம், நம்மையே நம்பிக்கொண்டிருப்பவர்கள். படிப்பகம் என்றாலும் பாசறையென்றாலும் கிளைக் கழகம் என்றாலும் அவரவர்கள்தான் அவற்றின் நிதி நிலைமையைக் கவனிக்க வேண்டும். இத்தனை தொல்லைகளுக்குடமிலேயே இதயத்து உறுதியைப் பணயமாக வைத்துக் கழகத்து விழாவினை இலட்சிய விளக்கம் தருகின்ற பெரு விழாவாக நம் தோழர்கள் நடத்திக் காட்டியுள்ளனர். எதிரிகளின் ஏளனச் சொற்களையெல்லாம் கேட்டுக்கொண்டே இலட்சியப் பாதையில் நடை போட்டுக்கொண்டிருப்பவர்கள், எம்போன்றோரின் வணக்கத்துக்குரியவர்கள்! அவர்களையெல்லாம் ஒரு விநாடி எண்ணிப் பார்த்தால், நினைவுக் கண்ணாடியில் உற்று நோக்கினால்...இதயம் நோக நோக ரிக்ஷா வண்டி ஓட்டுபவர்கள் என்றாலும் இலட்சிய வளர்ச்சிக்கு எந்த விலையும் தரத் துடிப்பவர்கள், ரைஸ் மில்லில் புழுதியோடு புழுதியாகக் கலந்து தினமும் உழைத்துத் திரும்புவோரானாலும் உயிரினும் மேலாகக் கழகத்தைக் காத்திருப்பவர்கள், வேலைப்பளுவைச் சுமப்பதுபோல் இதயத்தில் கொள்கைப் பளு இருப்பதால்கழகப் படை வலிமையைப் பெருக்குவதையே வாழ்வின் குறியாகக் கொண்டுவிட்டவர்கள், இவர்களைப்போல எண்ணற்றோர் நம் எதிரே வந்து நிற்கிறார்கள்! இவர்கள் இராசபாளையத்திலே இருந்தாலும் சிங்காநல்லூர், வெள்ளலூர், கணபதி முருகன் மில்ஸ் பகுதிகளிலேயிருந்தாலும் முன்னேற்றக் கழகத்தின் முரசொலிக்கிறார்கள். அவர் தம் வாழ்வில் தென்றல் வந்து வீசுமென்று நம்புகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய இலட்சிய வெற்றியினை வெகு விரைவிலே நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள், கழகத்தின் வெற்றிகளை எதிர்பார்ப்பதுடன் தங்களின் தொண்டுகளை கழகத்தின் கொள்கைச் சிறப்புகளுக்குத் தந்தாகவேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்த விழா நாளிலே நாம் தெரிவித்தாகவேண்டும்! கழகத் தோழர்கள் மட்டுமே முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியினைக் கண்டு மகிழ்ச்சி அடையவில்லை. நம்முடைய முகாமுக்கு வராதவர்கள், வரவிரும்புகிறவர்கள், விரும்பாதவர்கள், நம கொள்கைகளை ஒப்புக்கொண்டவர்கள், ஒப்புக்கொள்ளாதவர்கள் எல்லோருக்குமே ஒரு வகையான ஆசை வந்துவிட்டது. "இவர்கள் தங்கள் சாதனைகளைப் பெருக்கமாட்டார்களா விரைவிலே" எனத் தங்களுக்குள்ளேயே பேசிக்கொள்கிறார்கள்! வணிகத் துறையிலே இருப்பவர்களைக் கேளுங்கள்-முன்னேற்றக் கழகம்தான் இந்த நாட்டைக் காப்பாற்றும் என்று சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள்! தொழில் துறையிலே இருப்பவர்கள், வடநாட்டார் போட்டியினைச் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருப்பவர்களின் பெருமூச்சுக் கலந்த பேச்செல்லாம் மறைமுகமாக முன்னேற்றக் கழகத்தின் பொருளாதாரக் கொள்கைகளின் எதிரொலியாக இருக்கின்றன. வெளிப்படையாகப் பேசினால் இருக்கின்ற 'பெர்மிட்டும்', தட்சணை வைத்து எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற ஏதாவதொரு "கோட்டாவும்" பறிபோய் விடுமோ எனப் பயந்து கொண்டு வாழ்கிறார்கள். பொருளாதார மேதைகள் திராவிடத்தின் எல்லா பகுதிகளிலும் இருந்தாலும், எந்த இடத்தில் எந்த நேரத்தில் கூடினாலும் குமுறிக் கொட்டிவிடுகிறார்கள் வார்த்தைகளை, வலிமை மிக்க மத்திய சர்க்காரின் வஞ்சகப் போக்கினை எதிர்த்து! நாம் பயன்படுத்தும் வார்த்தைகள் அவர்களுக்குப் பழக்கமில்லை. ஆனால் நம்முடைய குறிக்கோள் இதயத்தைக் கவர்ந்துவிட்டது. எனவேதான் நம்முடைய குரலிலே பலதடவை பேசிவிட்டார்கள்! நீண்ட உறக்கத்திலிருந்து திடீரென்று விழித்துக்கொள்கிற நம்முடைய அந்தஸ்து குறைந்த அமைச்சர்கள் - தூக்கக் கலக்கத்திலேகூட பல நேரங்களில் உண்மையைப் பேசிவிடுகிறார்கள். அதன் வாயிலாகத் தங்களின் பேடித்தன்மைகளையும் காட்டிக்கொண்டு "மத்திய சர்க்கார் மனதுவைக்கவில்லை. எங்களைமறந்துவிடுகிறார்கள்" என்று ஒருவரும், "மறுத்துவிடுகிறார்கள்" என்று வேறொருவரும், "இருந்தாலும் முயல்கிறோம்" என இன்னொருவரும் நமக்கெல்லாம் ஆறுதல் மொழி தருகிறார்கள்!



துப்பாக்கியால் துளைத்தபோதும் துவளவில்லை நாம்...

திராவிட முன்னேற்றக் கழகத்தவரின் பத்தாண்டு காலப் பணி பலன் பெற்று வருகிறது என்பதைத்தான் இதுபோன்ற பல சான்றுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. இருவண்ணக் கொடியினை உயர ஏற்றி நம் தோழர்கள் கை தட்டும்போது கூட்டத்திலே நிற்கும் காவல்துறை நண்பரின் கைகளும் இணைந்து தங்கள் மகிழ்ச்சியைத் தருகின்றன! பள்ளிகளிலே இருக்கின்ற ஆசிரியர்கள் ஆசிரியைகள், கல்லூரிகளிலே இருக்கின்ற பேராசிரியை, பெரும் புலவர்கள் முன்னேற்றக் கழகத்தின் இலட்சியக் குரலை இலக்கியத்தின் மொழியின் வழியாகவாவது கேட்டுவிடத்தான் துடிக்கிறார்கள்; தூது அனுப்பித் தேடி வருகிறார்கள்! கவிஞருடன் சென்ற நான் மதுரை பாத்திமா மகளிர் கல்லூரிகூட நம் குரல் ஒலிக்கும் கலைக்கூடமாக இருப்பது கண்டு திகைத்தேன். அந்த எழிற்பூங்காவை வாழ்த்தினேன்! கல்லூரி மாணவர்களைத் தோற்கடிப்பார்கள், அந்தக் கல்லூரி மாணவியர் இரண்டொரு ஆண்டுகளில்! தியாகராசர் கல்லூரியென்றால் அங்குள்ள மாணவர் பட்டாளம் நம் பெரும் படையின் வீரச் சின்னங்களை தயார் செய்து கொண்டு கழகத்தின் நேரடிப் பணிக்குத் துடித்துக் கொண்டிருக்கிறது! கழகத்தைச் சுடுசொல் சொல்லிடும் நம் மாற்றார்களை மாணவர்களிடத்திலே ஒப்படைத்து விட வேண்டும். இயக்கத்தின் இலட்சியப் படிக்கட்டுகளை உறுதிப்படுத்தும் அவர்கள், கவனித்துக் கொள்வார்கள் உளுத்துப் போன மனம் படைத்தவர்களை! அந்த நல்ல நண்பர்களைக் கண்டபோது, செந்தமிழ் இனிக்க நம் பணியைப் பாராட்டியபோது, சீவானந்தம் கல்லூரிகளுக்கு அழைக்கப்பட இலாயக்கற்றவர் என்று மாணவர்கள் மதிப்பிட்டபோது, கழகத் தோழர்கள் வரும்போது கல்லூரி களிப்பால் துள்ளுகிறது என அறிந்தபோது, பாசமும் பற்றும் ஒன்றாக இணையும் போது, கழகத்தின் பெருமையினை எண்ணாதிருக்க முடியுமா? கல்லூரிகளில் நாம் பெறுகின்ற பெருமையினைப் பெறமுடியாதவர்கள், எதிர்பாராமல் கிடைக்கின்ற வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு தங்களின் அறியாமையை விற்பனை செய்கிறார்கள். கழகம் தன் வீரப் புதல்வர்களை-அன்புத் தோழர்களை-ஆர்வத் தொண்டர்களை எங்கெங்கும் நிரப்பி வைத்து அவர்களுக்குப் புதிய பாடம் போதிக்கிறது!

— 8-ம் பக்கம் —

கூடலரசன்

காரைக்குடிக் கவியரங்கம்

குறள் நெறிக் குடும்பம்

6. தந்தை.

விண்ணில் முளைத்து விளங்கும் இளங்கதிர்போல்
கண்ணில் இனித்திடும் எம்கண்ண தாசத் தலைவ!
பண்பார் தமிழ்வளர்த்த பாண்டித் துரையென்று
கண்டார் மகிழும் கவிஞர்! முடியரசே!
எண்ணமெலாம் தங்கள் இனிய தமிழ்க்காக்கி
வண்ணக் கவியரங்கில் வந்திருக்கும் தாய்க்குலமே!
தங்கள் தமிழர் தலைநிமிர்ந்து வாழ்வதற்காய்ச்
சிங்கமென இங்கிருக்கும் செந்தமிழாம் தந்தையரே!
முகிழ்க்கும் இளநிலவாய் மூடவிருட் பகையை
வளைத்து மிதிக்கும் வலிமை மிகுகவிஞீர்!
அன்பால் இனிக்கும் அருமைத் தமிழ்க்கவியை
என்புருகிக் கேட்கும் எழிலரங்கின் காளையரே!
தந்தையர் தம்நாடென்று தாம்நினைந்த போதினிலே
சிந்தையில் வீரம் சிறந்து பிறக்குதென்றான்.
செந்தமிழ் நாடென்று செப்புகின்ற வேளையிலே
அந்தமில் இன்பம் அருஞ்செவியிற் பாயுதென்றான்.
முந்தையர் தம்வாழ்வாய் முளைத்த தமிழ்ப் பாரதியைச்
சிந்தை தனில் நிறுத்தி செம்மையுறவே நினைந்து
எங்கள் தமிழ்நாடு ஏற்றமுற இன்பமதாய்
தங்குதடை யின்றித் தமிழ்க் கவிதை பாடிடுவேன்
பந்தமுறக் கேட்பீர்! பரிந்து.

(நூல்)

குறட்கழகம் எனும் அழகி நாளுமிங்குக்
குமரிஎன வளர்கின்றாள் கொள்கை தன்னால்
அறல் கூந்தல் தனைமணக்கும் ஆற்றல்மிக்கான்
அறிஞனவன் காமத்துக் கரசனல்லன்.
புறப்புலவீர்! பேரவையீர்! உண்மையீது!
மறந்திடிலோ தமிழ்க்குலத்துக் கிழுக்கேயாகும்.
பிறப்புரிமைக் குறள் நெறியாம் குடும்பம் காணல்!
பேரின்பத் தந்தைநெறி செல்வோம் யாமே!

தந்தையென்ற தலைப்பினை யான் கண்டபோது
தடையின்றிக் கருத்தொன்று எழுந்ததாலே
சிந்தனையில் மூழ்கிவிட்டேன் ஏனென்பீர்கள்
சிறுமழலை யென் இல்லத்தில் இன்னும் இல்லை.
எந்தையைப்போல் தந்தையென ஆதல்வேண்டின்
இயம்புகிறேன் திங்கள் ஒரு மூன்றுவேண்டும்.
இந்தநிலை தன்னில் குறட்கழகத்தார்கள்
இங்கு என்னை நிறுத்திவிட்டார்! இஃது உண்மை!

என் தலைவி என்னிடத்தில் நெருங்கிவந்து
எழுதாத சித்திரம்போல் அசையா நின்று
சின்னவிரல் தன்னை நாசிதனிலே வைத்துச்
சிரித்திட்டாள் குலுக்கென்று சிறிது நோக்கி
என்ன இது என்றிட்டேன் தலைப்பைக் காட்டி
இம்மென்றாள் ஆம் என்றேன் இன்றே உண்மைத்
தந்தையென ஆகிவிட்டேன் என்றேன் மென்மைத்
தனிவிரலால் நிலங்கிளறி இன்பம் தந்தாள்.

நிலமகளைத் தனக்குரிமை ஆக்கி நல்ல
நிறையுழைப்பால் தலைவனெனப் பலரும் போற்ற
குலமகளாம் தலைவிதனை மணமும் செய்து
குழலினொடு யாழிசையைப் பழிக்கும் மக்கள்
நிலவுமுக மழலைமொழி இன்பம் கேட்டு
நிலைபெறுநற் பணியாளர் நண்பரோடு
கலகலெனச் சிரித்துமகிழ் சுற்றம் கண்டு
கலந்துண்டு வாழ்பவனே தந்தை ஆவான்.

நல்லகுறள் நெறிக்குடும்பம் தன்னை இந்த
நாட்டினிலே தோற்றுவித்தல் வேண்டுமெனில்
வல்லதொரு தந்தைஇன்றேல் முடியுங்கொல்லோ?
வளர்கவிஞீர்! தமிழகத்தீர் வாய்மைசொல்லீர்!
கல்லாலே மனம்படைத்து எதையும்தாங்கும்
கருத்தாலே இல்லறத்தை நிறுத்து இன்பச்
சொல்லாலே பகுத்துண்டு வாழ்வீர்என்று
சொன்ன திருவள்ளுவனே உலகின் தந்தை.

உலகம்எனும் பெருங்கடலில் குடும்பம் என்ற
ஒப்பற்ற பொன்கலத்தை இயக்கும்போது
கலகம் எனும்பெரும்முதலை சமயம்பார்த்துக்
கனிவோடு கலம்கவிழ்க்கப் பார்த்தேநிற்கும்.
நலஞ்சிதைக்கும் சாதியென்னும் தேளும் பொல்லா
நச்சரவாய் படமெடுக்கும் மதமும் நல்ல
குலஞ்சிதைக்கும் காலத்தும் ஆண்மை குன்றான்
கொள்கை வளர் குறட்குடும்பத் தந்தையாவான்.

வண்ணமலர்த் தாமரைபோல் வாழநிற்கும்
வாழ்வற்ற இந்நாட்டுமங்கை நல்லார்
சொன்னமெனக் கையினிலே மகவைத் தாங்கித்
துடிக்கின்றார் அரைவயிற்றுச் சோற்றுக்காக
பொன்கொழிக்கும் திருநாடு பொன்னியெனும்
புனலாறு பாய்கின்ற வளவன்நாடு
தன்னில் அன்றோ யாம்பிறந்தோம்? என்றே அன்னார்
தனைநினைந்து வருந்துகின்ற தோற்றம்காணில்.

கொன் நுனைவேல் அம்பெடுப்பான் வில்லும் ஏந்தி
கொடியவர் தம்தன் நலத்தைப் பொடிகள் செய்வான்.
இந்நிலத்து உழைக்கின்ற மக்கள் எல்லாம்
இமமலைபோல் உயர்ந்தோங்கி இன்பம்காண,
பொன்னுலகு, சமைத்திடுவான் இன்றேல் இந்தப்
பூவுலகை அழித்திடுவான்புயல் போல் பாய்வான்.
மன்னுபுகழ் பெற்றிடுவான் மானம்காப்பான்
மறத்தமிழர் குறட்குடும்பத் தந்தைஎன்பான்.

அன்னைமொழி உணர்ச்சி இல்லா ஏற்றம் எல்லாம்
ஆடையின்றி அலங்கரித்தல் ஆகும்என்று
தன்னுணர்வால் சொன்னமறத் தலைவனெங்கள்
தமிழ்ப்பாண்டித்துரை வேந்தன் தலையாம் தந்தை
அன்னவனின் வீரம்எங்கே? தமிழைக் காக்கும்
ஆற்றல்எங்கே? என்றிடுவான் அரிபோல் பாய்வான்.
பொன்மொழியாம் வானொலியைக் காப்பதற்கே
புறப்படுவான் மறப்புலிபோல் புனைவான் வாகை.

வாளெடுத்துப் போர்க்களத்துப் புகுந்தபோது
வையகமே எதிர்த்திடினும் அஞ்சார் குன்றம்
தோளெடுத்த தனிவீரன் மரபில் வந்தார்
துவள்வதில்லை போர்க்களத்தில் இஃது உண்மை
தாள்பிடித்துக் கிடந்ததில்லை மறவர்நாடு.
தமிழ்காக்கப் புறப்படுவீர் குறள்மேல்ஆணை
ஆள்வதற்கேயாம் பிறந்தோம் என்பான் நல்ல
அறம்வளர்க்கும் குறட்குடும்பத் தந்தைஎன்பான்.

தமிழ்த் தந்தை திருவிக இல்லை இந்நாள்
தறுகண்ணர் மறைமலையும் மறைந்துபோனார்
அமிழ்தான தமிழ்காக்கும் ஆற்றல் மிக்கார்
அறியாது குறட்டை போட்டு உறங்குகின்றார்
இமிழ்கின்ற கடல்சூழ்ந்த தமிழர் நாடே
என்செய்வ தென்னென் றிருக்கின்றாய் நீ!
புகழ்செய்யும் வாளெடுப்பாய் இன்றேல் இன்றே
பூண்டோடு அழிந்தொழிதல் நன்றே என்பான்.

தாய்மொழி அறியாமூடர் தாம்ஆளும் ஆட்சிதன்னில்
பாய்புலி வாழும்காடே பயனுடைத்தாகும் என்பான்
நாயும் நன்கறியும் மண்ணை நாட்டினை ஆளுகின்ற
நாயகர் அறியதென்னே என்றுள்ளம் நைய்வான் தந்தை.

நாட்டினில் பேரின்பத்தை நாட்டுதல்
வேண்டும் என்னில்
வீட்டினில் நாளொன்றுக்குக் குறளொன்று
கற்றல் வேண்டும்
ஏட்டினில் மட்டும் மானம் இருப்பதால்
பயனென் றில்லை
வீட்டினில் வேண்டும் என்பான் குறள்நெறிக்
குடும்ப தந்தை.

தேன்பொழி தமிழையெங்கள் திருக்குறள் தன்னை இன்று
வான்பொழி மழையேயன்ன வையகம் போற்றக்கண்டு
தான்பொழி மழைக் கண்ணீரால் தமிழகம் தழைப்பக்
காண்பான்
ஆன்பொழி பாலேயன்னான் குறள் நெறிக் குடும்பத்தந்தை.

— 12-ம் பக்கம் —

பெருமைக்கு மறைவில்லை; பேசும் புகழுக்கு அழிவில்லை.



தோற்றம்: 13-10-1911. மறைவு: 17-9-1959.

இலங்கையை இந்தியாவின் கண்ணீர்த்துளி என்றான் ஒருவன்...

அந்தக் கண்ணீர்த்துளி இன்று கோடி கோடி கண்ணீர்த்துளிகளைக் கொட்டுகிறது...

சிங்கள வெறியர்களிடைச் சிக்கிக் கண்ணீர் வடித்த தமிழர்களை எண்ணிக் கண்ணீர் வடித்தான் ஒருவன்...அவனை எண்ணிக் கண்ணீர் வடிக்கிறது தமிழினம் இன்று. ஈழத்தீவில் தலைவிரிகோலத்தோடு அலைந்த மக்களுக்காக உழைத்தான் ஒருவன். அவன் வாழ்வேடு முடிந்ததற்காக அழுகிறது ஈழத்தமிழ்க்குலம்...மொழியுரிமையை இழந்த மக்களுக்கு விழி ஒளியைத் தந்தான் ஒருவன். விழி ஒளியைத் தந்த அவன் விழியை, இருள் சூழ்ந்துகொண்டதை எண்ணிப் புலம்புகின்றனர் தமிழ்பேசுவோர் அனைவரும்.

இருள் கப்பிய வாழ்வை அவன் துடைத்தான்...இன்று அந்த உயிரோவியத்தைச் சாவிருள் கப்பிவிட்டது. ஆம்! இந்தக் கிழமை நாம் கேட்ட சோகச் செய்தி-நம் இதயத்தைத் துளைக்கும் துன்பக்கணை இது: ஈழத்தமிழ்க் குலத்தின் ஒளிமாமணி, கோப்பாய்க் கோமான் கு. வன்னியசிங்கம் அவர்கள் மறைந்துவிட்டாராம்.

குமுறி எழுகின்ற கடல், அலறி விழுகின்ற உள்ளங்களை விழுங்கட்டும்!
சீறிப் பாய்கின்ற காற்று, வீரிட்டழும் தமிழ்க்குலத்தைச் சாய்க்கட்டும்!
சுழன்றெரிகின்ற நெருப்பு, உழன்று தவிக்கின்ற நெஞ்சங்களைச் சுட்டெரிக்கட்டும்.
வேறு வழியில்லை, இந்த வேதனையை மறக்க.
அழுகைக்கோ தொழுகைக்கோ சலுகை காட்டுவதல்ல, காலம்! அறிவோம்.
உறவுக்கோ நெஞ்சப் பரிவுக்கோ கனிவு தருவதல்ல, சாவு! தெரிவோம்.
சிறப்புக்கோ, செய்த தொண்டுக்கோ தலைவணங்குவதல்ல, இறப்பு! கண்டிருக்கிறோம்.

"13-10-1911 அன்று தெல்லிப்பளையில் தோன்றின குழந்தை ஒன்றுக்கு வன்னியசிங்கம் என்று பெயரிட்டனர். அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் வளர்ந்தது. சைவ பரிபாலன வித்தியாசாலையிலும், தெல்லிப்பளை மகாசன ஆங்கிலப்பள்ளியிலும், யாழ்ப்பானம் இந்துக்கல்லூரியிலும் கல்வி கற்று, பீ. ஏ. பட்டம் வாங்கி, இளைஞனானது. அந்த இளைஞன் வழக்குரைஞர் தொழிலுக்கும் படித்துக்கொண்டான். அவன் அரசியல் நிகழ்ச்சிகளில் அக்கறை செலுத்தினன். இலங்கையை அழகு நிலமாக்கியோர் கலங்கி நிற்பதைக் கண்டான். அவர்கள் குரலை ஓங்கி ஒலித்தான். அல்லல்படும் தமிழர்கட்காக, காசு வாங்காமலே அறமன்றமேறி வழக்குரைத்தான். யாழ்ப்பாணத்தில் 'தலைசிறந்த ஏழை பங்காளன், தன்னிகரற்ற வழக்குரைஞன்' எனப் பெயர் பெற்றான். அதனால் அவ்விளைஞன் தலைவன் ஆனான்.

1947 பொதுத் தேர்தலில் அப்போது தான் சார்ந்திருந்த தமிழர் காங்கிரசின் சார்பில் நின்று வெற்றிபெற்று இலங்கைப் பாராளும் மன்றத்தின் கோப்பாய்த் தொகுதி உறுப்பினரானார். கோப்பாய்த் தொகுதி இலங்கையின் வடபகுதி மாநிலத்தில் உள்ளது. அவ்வியக்கத்தின் போக்குப் பிடிக்காததால், 1949-ல் தமிழரசுக் கட்சியினை, திரு. செல்வநாயகத்தின் துணையுடன் நிறுவினார். அன்றுமுதல் அவ்வியக்கத்தின் மூலமாக, தமிழ்மொழியின் மதிப்பைக் காக்கப் போராடி வந்தார். அவ்வியக்கத்தின் தலைவராக 1956 முதல் 1958 வரை விளங்கினார். சிலகாலம் அவ்வியக்கத்தின் பொதுச் செயலாளராகவும் பணியாற்றினார்.

இன்னும் பல உண்டு, இவரது பொது வாழ்வின் தொண்டுகள். வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சி மாநாட்டைத் தொடர்ந்து இனக்கலவரத்தை மூட்டிவிட்டனர், சிங்களக் "காடையர்". தாக்கப்பட்ட தமிழினத்தின் தலைவரான வன்னிய சிங்கம், பண்டாவின் அரசால் கொழும்பில் அவர் இருந்த வீட்டிலேயே மூன்று திங்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

1948-ல் இலங்கைப் பாராளும் மன்றத்தில், இலங்கைக் குடியுரிமைச் சட்டம் வந்தபோது, இலங்கைத் தமிழருக்கும் குடியுரிமை வேண்டுமென்று வாதிட்டார். அப்போது அவர் காட்டிய மேற்கோள்களும் சொல்லிய கருத்துக்களும் ஒன்றல்ல இரண்டல்ல; அவை அனைத்தும் கலங்கித் தவித்த தமிழருக்கு ஊன்றுகோலாக உதவின.

1956-ல் "சிங்களம்மட்டும் (ஆட்சி மொழி என்ற) மசோதா" இலங்கைப் பாராளும் மன்றத்தில் நிறைவேறியது. அன்றையப் பகலில் இவர் கொழும்பு நகரில் திரு. செல்வநாயகம் முதலியோரோடு அறப்போர் தொடுத்தார். சிங்களக்காடையர் அரசினரின் துணையுடன் இவரையும் பிற தலைவர்களையும் சாடினர். இவரது சட்டை கிழித்தெறியப்பட்டது. கைக்கடியாரமும், பணப்பையும் சூறையாடப்பட்டன. என்றாலும் கலங்காது, அறப்போரை முடித்துக்கொணடு பிற தலைவர்களோடு, அன்று கொழும்பு வீதிகளிலே இவர் ஊர்வலம் வந்ததை மறக்கமுடியுமா ?

1957-ல் தாய்த் தமிழகம் வந்து அனைத்துக் கட்சியின் தலைவர்களையும் கண்டு கலந்துரையாடினார். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் நம் கழகத்தின் சார்பில் கண்டனர். அல்லல்படும் இலங்கைத் தமிழருக்கு என்றும் நம் துணை உண்டு என்பதை நம் பொதுச் செயலாளர் தெரிவிக்கக் கேட்டு மகிழ்ந்து சென்றார். மற்றும் சீவானந்தம், சிவஞானம், எச். டி. இராசா முதலியோர் தங்கள் இயக்கங்களின் ஆதரவையும் தெரிவித்துக்கொண்டனர்.

இல்லற வாழ்வில் நான்கும் பெண்ணாகவே பெற்றார். ஐந்தாவது குழந்தை அருமை மனைவியின் வயிற்றிலிருக்கும்போதே, அவர் 17-9-59 அன்று மாண்டுபோனார். பகைக்குலத்தின் மண்டைப் புழுவை மாய்க்கப் புறப்பட்ட அவர், தன் 48-ம் வயதில் மாரடைப்பால் மாண்டு போனார்."- இப்படி ஒரு வரலாற்றை எழுதி வைத்துவிட்டுத் தன் வாழ்வை முடித்துக் கொண்ட சிங்கமே! என்ன குறை உனக்கிங்கே?

புகழுக்கோ, பொங்கும் வலிவுக்கோ படிவதில்லை வாழ்வின் எல்லை! படித்திருக்கிறோம்.

என்றாலும்...நினைவின் முனையிலே இத்துணையும் வந்து நின்றாலும்... நெஞ்சு கேட்கவில்லை. நெறிதவறிய 'பண்டார"த்தை, நேருக்கு நேர் நின்று கேட்டானே கேள்விகள் பல. அவற்றை மறந்தால், அவன் சாவை மறக்கலாம். கொண்ட கொள்கைக்காக-பண்டொருநாள் ஆண்ட மொழியின் வாழ்வுக்காக-நிறை தமிழுக்கு நேர்ந்த குறை அழிப்பதற்காக, சிறை சென்றானே அவன், அவறறை மறந்தால், அவன் பொன்னுடல் எரிவதைப் பொறுக்கலாம். கட்டிய மனைவக்கும், பெற்ற பிள்ளைகளுக்கும் ஒன்றுஞ் சேர்க்காமல், தாய்மொழிக்கு மட்டும் கோடி வளங்கள் சோத்தானே-அதனை மறந்தால், தன்னின உயர்வு பேசிய நா மண்ணுக்கிரையாவதைத் தாங்கிக்கொள்ளலாம்.

"இலங்கைத் தமிழரசுக் கட்சித்தலைவர்களிலே முக்கியமான ஒருவரும், இலங்கைத் தமிழாகளின் நல்வாழ்வுக்காக அரும்பாடுபட்டு வந்த வீரரும், இலங்கைகும் தென்னகத்திற்கும் நல்லுறவு நிலவும் வகையில் பெரும்பணி ஆற்றி வந்தவரும் அருமை நண்பருமான தோழர் கு. வன்னியசிங்கம் அவர்கள் திடீரென்று இயற்கையெய்திய செய்தி கேள்வியுற்றுத் திடுக்கிட்டுத் திகைத்துப்போனேன். அவர் மறைந்த துக்கச்செய்தி எனக்கும், என்னைச் சார்ந்த நண்பர்களுக்கும் பெருந்துக்கத்தை தருகினறது. அவரது இழப்பு பொதுவாகத் தமிழர்களுக்கு-குறிப்பாக இலங்கை வாழ் தமிழர்களுக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். அவரது மறைவால், அவரது துணைவியார் அருமைத்துணைவரை இழந்தார்கள்; அவரது குழந்தைகள் ஒரு நல்ல தந்தையாரை இழந்தார்கள்; தமிழாகள் ஒரு சறந்த வழிகாடடியை இழந்தார்கள்; தமிழரசுக்கட்சி ஒரு நல்ல தலைவரை இழந்தது; நாம் ஒரு சிறநத நண்பரை இழந்தோம்.

அவரது இழப்பு ஈடு செய்யமுடியாததுதான் என்றாலும், அவரது அறிவுரைகளும், அவர் ஊட்டிய உணர்ச்சியும், ஊக்கமும் நமக்கு என்றென்றும நல்ல முறையில் பயன்படட்டுமாக!

அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும்; உற்றார் உறவினர் நணபர்கள் ஆகியோருக்கும் என் சார்பாகவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாாபாகவும் ஆழ்ந்த இரக்கங்கள் உரியாவக!

வாழக அவரது புகழ்! வெல்க அவரது தொண்டு!" என்று நம் பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள் தந்த இரங்கற் செய்தியைத்தான் நாமும் சொல்ல முடியும். வேறென்ன எழும் வேதனை நெஞ்சைக் கவ்வும் போது ?

ஆனால்...முடியவில்லையே...நெஞ்சத்துப் புலம்பல் மடியவில்லையே.

வன்னியசிங்கம்! உன்னைக்கண்டு வணங்கியது அன்னிய சிங்களம்.
வன்னியசிங்கம்! உன் தொண்டு கண்ட புகழோ, தூய தங்கம்.
உன் தொண்டு, காலத்தைக் கடந்தது.
உன் வீரம், வேழத்தை நிகர்த்தது.
உன் கொள்கை, ஈழத்தைக் காத்தது.
அவை என்றென்றும் நின்று விளங்கும்! நின்புகழ் முழங்கும்!

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

காங்கிரசைத் தன் தலையிலே தாங்கிக்கொண்டிருக்கும் இந்திராகாந்தியார்...

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரு வளர்ச்சியிலே மறைந்து நிற்கும் பேருண்மைகளை இங்குள்ள மாற்றார்கள் புரிந்துகொள்ள முடியாமல் இன்றளவும் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்! மிகப் பெரிய அரசியல் மேதைகளானாலும், புரட்சியிலே வளர்ந்து மறைவிடங்களைப் புகலிடமாக்கிக்கொள்ளும் வித்தகர்களும் கூட கழகத்தின் வண்ணத்தோற்றங்களைக் கண்டு மலைத்து நிற்கிறார்கள். ஆளுகின்ற கட்சியினரும் அவர் தம் ஆதரவாளரும், ஏனையக்கட்சியினரும் அவர் தம் அடி பணிவோரும் அங்குமிங்கும் அலைந்து திரிகிறார்கள்; அள்ளி அள்ளித் தெளிக்கிறார்கள் அவதூறு மொழிகளை! ஆளுகின்ற கட்சிக்குத் தன் சொந்த பலத்திலே நம்பிக்கையில்லை; சோடை போனவர்களாகவே காட்சி தருகிறார்கள்! என்? அங்கேயும் கழகம் நடமாடுகிறது! வெளிப்படையாக இல்லாவிட்டாலும் இதயப் பூர்வமாக கழகத்தின் வழி நடக்கும் பல்லாயிரவர் ஒவ்வொரு கலெக்டர் அலுவலகத்திலும் இருக்கிறார்கள்; ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள எல்லா முகாமகளிலும் என்றேனும் ஒரு நாள் விடுதலைப் பண்பாடி வெளிக் கிளம்பும் படை வீரர்போல இருக்கிறார்கள், என். ஜி. ஓவினர் எனப் புதுப்பட்டம் பெற்றோர். தங்கள் சாதனைகளைப் பற்றி எத்தனைதான் சத்தான மொழிகளை வைத்து முத்தாரங்களைக் குவித்துக் காட்டினாலும் இன்றளவும் தனது ஊழியர்களை காப்பாற்ற முடியாத அரசு என்பதை அவர்களை உணரச் செய்பவர்களும் கழகத்தின் கொள்கை கோட்பாடுகளை இதயத்திலே கொண்டுள்ளவர்கள்தான் என்று சொல்லத்தான் செய்வர்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவனி தாயகத்துப் பெரு மக்களிடையே பாராட்டுதலைப் பெறுவதற்கு தன்னுடைய தூய தொண்டுகளை நிரப்பியிருக்கிறது. இதனை இட வேறுபாடு எதுவுமின்றி அரசியல் நிலையையும், மக்கள் தம் இதய உணர்ச்சிகளையும் ஒன்றாக இணைத்து மதிப்பிடுவோர் உணர்வர். பத்தாண்டு காலப் பணியில் நம்படை பலம் பெருகியது போலவே நமக்குள்ள கடமைகளும் பெருகி, அவைகளுக்கான தடைகளும் பெருகிவிட்டன! அந்தத் தடைகளைத் தகர்த்திடும் துணிவும் திறமையும் கழகத்தவர்க்கு உண்டென்பதில் நம் எதிரிகளுக்கும் சந்தேகமில்லை! அதனால்தான் இழிமொழி வீசுவோரையெல்லாம் ஒரு புன்னகையிலே நம்மால் வெல்ல முடிகிறது, அவர்கள் வெட்கித் தலை குனிகிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் பத்தாண்டுகளுக்கு முன்னால் துவக்கப்பட்ட நேரத்தில், இந்தியத் துணைக் கண்டம், விடுதலைபெற்ற புதுவாழ்வினைப் பெற்றிருந்தது. வெள்ளையரின் பிடி அகன்றுவிட்டாலும் அமைதி இல்லை. அன்றைக்குப் போர்க்களமாக மாறிய காஷ்மீரம், இன்றளவும் அது யாருக்குச் சொந்தம் என்ற சிக்கலிலேதான் இருக்கிறது. துண்டிக்கப்பட்ட பாகிஸ்தான் பகை நாடாகவே வளர்கிறது. அங்கே வளர்ந்த தலைவர்களிலே பலரைக் காணோம்! இந்தியா—அல்லது பாரதம் எனப் பட்டம் பெற்றுள்ள எஞ்சிய எல்லைக்கோட்டினுள் எத்தனையோ குழப்பங்கள். வெளிநாட்டு விருந்தாளிகள் எல்லாம் வடவரின் சொந்தக்காரர்களாகி விட்டனர்! அந்தப் பகுதிகளிலே இனச்சண்டைகள் இருந்தாலும் ஏற்பட்டாலும், தகராறுகள் என்று பேசியும், நாம் எல்லோரும் ஒன்றே என்று ஏமாற்றி, சேதி கேட்போருக்குச் சொல்லிவிடுகிறார்கள்! மார்வாடிகளுக்கும் பனியாக்களுக்கும், மராட்டியர்களுக்கும், குஜராத்தியருக்கும் மோதுதல் வந்தது. எத்தனையோ சாகசங்களைச் செய்து, பம்பாய் நகரத்தை இரண்டாக்கி, மீண்டும் ஒன்றாக இணைத்து, டில்லியின் நேரடி ஆட்சிக்கு இழுத்து, மீண்டும் இப்போது இரண்டாக்கித் தனி மாநிலம் அமைக்கப்போவதாகச் செய்திகள் வருகின்றன. வடநாட்டவர் விவகாரங்கள் அளவுக்கு மீறிய சொந்தப் பற்று பாசங்களை வைத்து, ஏகஇந்திய சர்க்கார் தன் கவனத்தைக் செலுத்துகிறது. ஆனால் தென்னாட்டின் அரசியல் ஒற்றுமைக்கு, இந்திய சர்க்கார் எந்த விதமான எண்ணத்தையும் கொண்டு நல்முயற்சிகளைச் செய்ய மறுத்துவிட்டது. தென்னாட்டு மாநிலங்களின் எல்லை அமைப்புகளை, இனஇலக்கிய உறவு முறைகளை எண்ணிப்பார்க்கவே இல்லை. காரணம் அகில இந்தியக் கம்பெனியார் என்ற பெருமையுடன் வடநாட்டவரின் ஏஜெண்டுகள் எல்லாக் கட்சியினரின் சார்பிலும் இருக்கிறார்கள்! வடவரின் ஆணைக்கு அடங்குவோர், இருப்பதால்தான் தாயகம் தாழ்நிலையிலே தவிக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகம் குடியரசு என்ற பெயராலே தடியரசு நடத்துகின்ற சர்க்காரைக் கண்டிக்க மறக்கவில்லை. தென்னகத்தின் அரசுரிமைகளைத் தட்டிப் பறித்திடும் டில்லி யாட்சியினரின் தர்பார் போக்கினைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற குரல் கொடுத்தது, முன்னேற்றக் கழகம் ஒன்றுதான்! இந்தியாவை டாலர்ச் சீமான்களுக்கும், ரூபிள் மோகினிகளுக்கும் அடகுவைக்க உருவாக்கப்படும் திட்டங்களில் தென்னகம் புறக்கணிக்கப்பட்டதை, கழகத்தின் முக்கியப் பிரச்சனையாக வைத்துத் தென்னக சர்க்கார்களையும், பொது மக்களையும் உணரச் செய்த பெருமை கழகத்திற்குமட்டுமே உண்டு. இங்கேயிருக்கும் காங்கிரஸ் கனவான்கள், கனம்கள் ஐந்தாண்டுத் திட்ட வளர்ச்சிகள், சாதனைகள் இங்கிருந்தால் என்ன, அங்கிருந்தால் என்ன, எல்லாம் இந்தியாவுக்குள் தானே என்று நமக்குச் சமாதானம் சொல்லத் துணிந்தார்கள்! கம்யூனிஸ்ட்கள் அப்படியே சொல்லியது மட்டுமல்லாமல், வடநாட்டிலே கொட்டப்படும் பணம் சரியாகக் கொட்டப்படுகிறதா இல்லையா என்ற தரகு வேலையையும் நாமே செய்ய வேண்டுமென்றும், குரல் வலிக்கப் பேசியும் எழுதியும் கழகத்தின் முயற்சிகள் பொதுமக்களின் நல்ல பார்வையைத் திசை திருப்பிவிடுவதாகவும் கண்டித்தார்கள். பிரஜாக்கள் - சோசலிஸ்டுகளுக்கு இவைகளிலேயெல்லாம் சொந்தக் கொள்கையும் நிர்ணயிப்பும் கிடையாது! நம் நாட்டையே மறந்தவர்களைப் போல நடித்து நடமாடுவார்கள்! 'இந்தியத் தமிழர்கள்' என்ற இரட்டைப் பிறவிகளுக்கு சுய நிர்ணயம் தான் முக்கியமே தவிர திட்டப் பிரச்சனைகளைப் புரிந்துகொள்ளமுடிவதில்லை! தமிழகத்தின் 'தன்னேரிலாத் தலைவர்' சிவஞானத்துக்கு முக்கிய வேலை ஒரு சினிமாப் படத்திற்கு போஸ்டர் ஒட்டுவதாகிவிட்டது! அவர்களிடத்திலே அரசியல் அம்சம் வருவதேது? எனவே இந்த ஏமாளிகளுக்குப் புத்தி புகட்டுவதுபோல, பல புதிய நகரங்களையே உண்டாக்கி, நவ இந்தியாவை, நவ பாரதத்தை விந்தியத்துக்கு மேலேயேஅமைத்துக் கொண்டுவிட்டார்கள்! தென்னகத்தின் தேவைகள் அப்பளத்திலே நின்றுவிட்டன. சென்னை சர்க்காரின் முயற்சிகள் அந்தரத்திலே தொங்கிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய அரசியல் முடவர்களை நாடு இனியும் நம்பக்கூடாது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் திராவிடத்தின் தேவைகளை மறந்ததில்லை; சேவைகளைத் துறந்ததில்லை! தென்னகத்தின்மீது வடவர் சுமத்தும் எந்தப் பழியினையும் தாங்கிக்கொள்ளும் மற்றக் கட்சியினரின் மரக்கட்டைப் பண்பும், மட்டரகப் போக்கும் கழகத்தின் நிழலிலேகூட இருந்ததில்லை. வடநாட்டிலே இருக்கின்ற அரசியல் ஆசான்கள், இங்குள்ள கட்சியினருக்குக் கட்டளைகள் பிறப்பிக்கும் கேவல நிலையை மாற்றி அமைக்கவேண்டும், இங்குள்ள கட்சிக்காரர்கள், தலைவர்கள், வடவர்க்கு வழிகாட்டிகளாய் வரவேண்டுமென்று விரும்பி நினைவூட்டியவர்கள் நாம்தான்! இங்குள்ள அகில இந்தியக் கட்சிக்காரர்களுக்குத் தாங்களும் அகில இந்தியத் தலைவர்களாய் வர முடியுமா என்பதே பெரிய சந்தேகம். நாம், அந்தத் தகுதி உங்களுக்கு உண்டென்று சொன்னால்கூட எளிதில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்த அடிமை மனப்பான்மையும், அடங்கிப்போகும் அவல நிலையும் அவர்களிடத்திலே இருப்பதால்தான் தென்னகத்தைப் பாதிக்கும் மொழிப்பிரச்னையில் அகில இந்தியக் கட்சிக்காரர் அத்தனை பேரும் ஊமைகளாக ஆமைகளாக இருக்கிறார்கள்! இந்தி வெறியர்களின் எல்லா முயற்சிகளுக்கும், எல்லா வகையான ஆதரவுகளையும் மனம் குளிர்ந்து செய்கின்ற பரந்தாமன் பண்டிதநேருவின் ஆட்சிதான், தென்னவரின் மொழிப்பற்றை மதிக்கவில்லை; மிதித்து விட்டது வேண்டுதலை. தென்னாட்டில அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இந்தி மொழி ஆதிக்கம் கூடாதென்று அத்தனை பேர்களும் ஒன்றாக இணைந்து எதிர்ப்பினைக் காட்டினார்கள். ஆனால், பாராளுமன்றத்துப் பட்டாளம—'மாடுகளின் கூட்டம்' வளரும் பயிரெனத்தகும் அழகு மொழிகளையெல்லாம் அவமதித்து விட்டு ஆட்சிமொழிச் சட்டத்தைநிறைவேற்றிவிட்டது. விடுதலைப் படையின் சரித்திரச் சான்றோன் சம்பத் மட்டுமேதான், இந்தி வெறிச்சழக்கர்களைச் சாடினார்! அவர் பேசிய நேரங்களில் வடவரும், வடவரின் தாசர்களும் பலமுறை குறுக்கிட்டுக் கோணங்கித்தனச் சேட்டைகளைச் செய்திருக்கிறார்கன். பாருக்கெல்லாம் பஞ்சசீலம் போதிக்கும பண்டிதர், பார்த்துக்கொண்டே இருந்தார்! இந்திதான் வேண்டும் என்று பேசும் கட்சிக்காரர்கள் விரைவிலேயே தாங்கள் பிறந்த மண்ணுக்குத் துரோகம் செய்யாத வகையில் செயல்படத் துணியவேண்டும்!

திராவிட முன்னேற்றக் கழகம் தாயகத்தை விடுவிக்கும் அரும்பணியில் இத்தகைய எல்லா வகையான காரியங்களையும் தன் இதயத்திலே நிறுத்திப் பணியாற்ற வேண்டியுள்ளது. மற்றக் கட்சிகளைப்போல ஏதேனும் ஒரு பிரச்சனையில்மட்டும் நம் கவனத்தைச் செலுத்திவிட்டு ஓய்ந்துவிட முடியவில்லை. அரசியல் துறையில் நம் நடமாட்டம் இல்லாவிட்டால், அந்த அரங்கம் அழகு பெறுவதில்லை! கலைத்துறையில் நம் கவனம் திரும்பாவிட்டால், அந்தப் பகுதி எழில் துலங்க காட்சியளிப்பதில்லை! தமிழ் இலக்கியத் தோட்டத்தில் நம் காவலும் கண்காணிப்பும் இல்லாவிட்டால், மறைமலையார் எழுதியது தமிழா? அது உரை நடையா? என்று கேட்கும் அவசரக்காரர்கள் பெருகிவிடுவார்கள்! கவிதையும் கதையும் நம் கைவண்ணத்தால் சீர்பெருவிட்டால், 'பாரதிதாசனும், அண்ணாத்துரையும் புரட்சிக் கருத்துக்களைத் தரவில்லை' என்று விமர்சனம் செய்யும் அகம்பாவக்காரர்கள் வளர்ந்துவிடுவார்கள்! "மொழிப்போரே விரைந்து வா. விடுதலைப் படை திரண்டு நிற்பதைப் பார்" என்று சொல்லிடும் துணிவும் தெம்பும் நம்மிடத்திலேதான் உண்டு! தமிழை உயிருக்கு நேர் என்பவர்கள், இலக்கிய மேதையென்று சொல்லி அதனைப் பிழைப்பாகக் கொண்டவர்கள், மொழிப் போரிலே இடம் பெறமாட்டார்கள்; விழி மூடித் தூங்குவார்கள்! முன்னேற்றக் கழகத்தைத் தூற்றுவதற்கென்றால் கூலிப் படைகள் மிகச் சுலபமாக கிடைத்துவிடுகின்றன! பத்தாண்டு காலமாக நம் பணியினை எதிர்த்துப் பார்த்தவர்கள், எந்த வகையிலும் சமாளிக்கமுடியாமல் ஏமாந்தவர்கள் அரசியல் நாணயமிழந்த இழி செயல்களைத் தங்களுக்குத் துணையாக்கிக்கொண்டார்கள்! தமிழகத்தின் எந்தப் பொது நிகழ்ச்சியாக இருந்தாலும், கழகத்தின் சாயல் அங்கெல்லாம் படிந்துவிடுகிறது. அதனைப் பார்க்கின்ற அழுகிப் போன மனம் படைத்தவர்கள் அலறித் துடிக்கிறார்கள், அபலைகளைப்போல கண்ணீர் வடித்துப் புலம்புகிறார்கள்! அரசியல் அமங்கலிகள் தங்களின் விலை போகாத விதவைத்தன்மையை எண்ணியெண்ணி விம்முகிறார்கள்! கழகத்தின் புகழ் வளர்க்கும் தோழரே! தொழிலாள நண்பர்களே! உங்கள் உழைப்பு என்றும் பாழாகாது. கொடி தூக்கிக் கூவி விட்டு ஓடி ஒளிந்துகொள்ளும் தலைவர்களை நாம் பெறவில்லை. விடுதலைப் படையின் வழிகாட்டிகளாக வையகத்தின் வரலாற்றுச் சுவடிகள் பெயர் நினைத்துப் பேசிடப்போகும் நல்லறிவாளரை நாம் பெற்றுள்ளோம். அவர்களைப் பயன்படுத்தி நாம் பலனடைவோம்—பணியாற்றுவோம்! அன்புத் தோழரே! அன்னையின் நாட்டைப் பகைவர்கள் சூழ்ந்துவிட்டார்கள். 'திராவிடநாடு திராவிடருக்காக' நீவிர் செயல்படுவீர்!

...தன் அடியார்களை ஏவி நம்மைச் சிறைக்குள் தள்ளினாலும் நாம் சிந்தை கலங்கவில்லை. ★

முயல்தலும் முயற்சித்தலும்

இற்றை நாளில் தமிழகமெங்கணும் ஓரளவு செய்தித்தாள்கள் பரவத் தொடங்கியிருக்கின்றன. அத்தாள்கள் பல்வேறு திறத்தனவாய், சொல்மாறி உரைப்பனவாய், விருப்பமில்லாச் செய்திகளை வேண்டுமென்றே திரித்தும், மிகைப்படுத்தியும் வெளியிடுவனவாய், உயர்ந்த நன்னடையிருந்தும் உதறித்தள்ளி 'மணிப்பிரவாள' நடையை நம் மனம் நோவத் திணிப்பனவாய் வந்துகொண்டிருக்கின்றன.

'தாய்மொழி வாழ்விழந்தால் தரைமோதி மாய்தல் நலம்...' என்று கூறும் பெருமகனார் திரு. வி. க.வின் தகைசால் நடையை மனநலம் நன்கமையாத சில'வறிஞர்' தூற்ற முற்படலானார்.

ஆதலால் அனைத்துத் தமிழ்த்தாள்களும் முடிந்த அளவு நல்ல தமிழ் நடையைப் பயன்படுத்த வேண்டும். தவறென்று நன்கு தெரிந்திருந்தும், கீழ்த்தரமான நடையினையே மேன்மேலும் கைக்கொண்டு சில'வறிஞர்கள்' எழுதுவார்களேயானால், அவர்களெல்லாம் கடையர்களே.

சிற்சில "பத்திரிகைகள்" இலக்கணம் சரிவரத் தெரியாததனால் பற்பல பிழைகள் புரிந்து வருகின்றன. அவைகளில் சந்திப் பிழைகள் ஏற்படுவது மிகவும் இயல்பானதொன்றாகப் போய்விட்டது. நிலைமொழியையும் வருமொழியையும் சேர்த்து நன்முறையில் ஒலித்துப் பார்த்தலே சந்திப் பிழைகள் ஏற்படாமற் காக்கத் தேவைப்பட்ட செவ்விய செயலாகும். அடுத்து, 'அருவருப்பு' என்பதை 'அறுவறுப்பு' என்றும், சுவர்+இல்—'சுவரில்' என்பதைச் 'சுவற்றில்' என்றும் அவை எழுதி வெளியிடுகின்றன. இவையெல்லாம் தவிர 'முயற்சிக்கிறான், முயற்சித்தான், முயற்சிப்பான்' என்று பெரும்பான்மையான பத்திரிகைகள் எழுதுகின்றன. 'முயற்சிக்கிறான்'—என்ற சொல் சரியா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வடமொழித் திணிப்பினால் தமிழ் மொழிக்கு ஏற்பட்ட கேடுகளில் இஃதொன்றாகும். பெரும்பான்மையான தாள்கள் வடமொழிச் சொற்களின் பகுதியாய்ப் பிறந்த 'ஆலோசிக்கிறான், பூசிக்கிறான், சந்தோசிக்கிறான், நமஃச்கரிக்கிறான், சிருஃச்டிக்கிறான்...' முதலிய வினைமுற்றுச் சொற்களையே பயன்படுத்தி வந்தன...அந்தப் பழக்கக் கேட்டினால்தான், ஓசை ஒற்றுமை சரியாக வருவதால் 'முயற்சிக்கிறான்' என்று எழுதலாயின. 'ஆலோசி, பூசி, சந்தோசி, நமஃச்கரி, சிருஃச்டி' ஆகிய ஏவல் வினைப் பகுதிகளோடு 'கிறு' என்ற நிகழ்கால இடைநிலையும், 'ஆன்' என்ற உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதியும் சேர்ந்து புணரும் பொழுது, சந்தி எழுத்து ஏற்பட்டு 'ஆலோசிக்கிறான், பூசிக்கிறான்...' முதலிய சொற்களாயின. இவை தமிழிலக்கண முறைப்படி சரியே! ஆனால் இவைகளைப் பயன்படுத்திப் பயன்படுத்தி ஒலியுறுப்புகள் அடிமைப்பட்டதனால்தான் 'முயற்சிக்கிறான்' என்று எழுதவேண்டியதாயிற்று. இவ்வினைமுற்றுச் சொல்லின் பகுதி யாது என்று தெரிந்திருந்தால் இப்பிழை ஏற்பட்டிருக்காது. இதனுடைய பகுதி 'முயல்' என்பதாகும். வினைப்பகுதி பிரிக்கமுடியாத ஏவலாகவே யிருக்கும். ஆகவே 'முயல்' என்ற பகுதியோடு 'கிறு' என்ற நிகழ்கால இடைநிலையும், 'ஆன்' என்ற உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதியும் சேர்ந்து புணரும்பொழுது 'முயல்கிறான்' என்றுதான் ஆகுமே ஒழிய, 'முயற்சிக்கிறான்' என்றாகாது.

'முயற்சி' என்பது பகுதியாக இருந்தால்தான் 'முயற்சிக்கிறான்' என்றாகும். ஆனால் 'முயற்சி' என்பது 'முயல்' என்ற பகுதியடியாய்த் தொழிற் பெயர் விகுதி சேர்ந்த, தொழிற் பெயராகும்.

ஆகவே 'முயல்கிறான், முயல்கின்றான், முயலாநின்றான், முயன்றான், முயல்வான்' ஆகிய சொற்களே இலக்கண முறைப்படி சரியான சொற்களாகும்.

எனவே "பத்திரிகைகள்" இனிமேல் எழுத முயலும்பொழுது 'முயற்சிக்கிறான், முயற்சிப்பான், முயற்சித்தான்' போன்ற சொற்களை வேரோடு களைந்தெறியும் என்று திண்ணிதாய் நம்பலாம்.

இப்பிழையைத் தமிழறிஞர்கள் அனைவரும் கண்டு மனம் நொந்தனரேயன்றிப் பத்திரிகைகட்கெல்லாம் வெளிப்படுத்தினார்களில்லை என்று நினைத்தே இக்கட்டுரையை எழுதலானேன். ஒவ்வொரு வினைச் சொல்லையும் கையாளும்பொழுது, பகுதி கண்ட பிறகு சொல்லாக்கிப் பயன்படுத்துவார்களேயானால் பெரும்பான்மையான பிழைகள் குறையும்.

செய்தித்தாள்கள் பிழைகளின்றிச் சொற்களை எழுத முயல வேண்டும். தமிழறிஞர்கள் அவ்வப்பொழுது தினைத்துணையும் பின் வாங்காது துணைநிற்க வேண்டும்.

-புலவர் தொ. இரா. நஞ்சுண்டன்.

வருக! வாழ்வு பெறுக!

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

"இந்த உலகத்தில் எத்தனையோ பேர் பிறக்கிறார்கள்; வாழ்கிறார்கள்; இறக்கிறார்கள். ஆனால் அவர்களெல்லாம் மனிதர்களா என்றால் இல்லை. ஏனெனில் இவர்களைப்போல் சின்னஞ்சிறு அத்திப்பழத்தின் உள்ளே எத்தனையோ கோடி கொசுக்கள் தோன்றுகின்றன; கவலையின்றி வாழ்கின்றன; அத்திப்பழம் வீழும்போது தாமும் வீழ்ந்து மறைகின்றன. அந்தக் கோடி கொசுக்களுக்கும், இந்தக் கோடி மனிதர்களுக்கும் எம்முறையிலும் வேற்றுமை இல்லை! ஆனால் மனிதர் மனிதராக வேனும் சாகவேண்டுமானால், தம் நாட்டுக்காகவும் மொழிக்காகவும் பாடுபட்டுப் புகழெய்த வேண்டும்" என்கிறார் சுந்தரனார்.

புழுவையும் பொங்கியெழுமாறு தூண்டுகிறது இந்த உவமை!

"உதும்பர தருவில்
 ஒருகனி யதனுள்
பிறந்திறும் அசகம்
 இவரிலும் கோடி
பிறந்தார் என்போர்
 புகழுடன் சிறந்தோர்"

என்ற மனோன்மணீய வரிகள், இரத்தினச் சுருக்கமாக கோழைகளுக்கும் வீரர்களுக்கும் உள்ள உலக உறவை மிக அருமையாகச் சொல்லிக் காட்டுகின்றன.

சுந்தரனார் பாதையில் சுவடி எழுத வந்த பாரதி பாடுகிறார்:

"வெற்றிகொள் புலையர்தாள்
 விழ்ந்துகோல் வாழ்வீர்!
மொக்குள்தான் தோன்றி
 முடிவது போல
மக்களாய்ப் பிறந்தோர்
 மடிவது திண்ணம்"

என்ற கருத்து, அப்படியே சுந்தரனாரை நகல் செய்வதாக இருந்தும், புதுமையோ, கருத்துச் செறிவோ காணப்பெறுமையால், மிக மிகச் சாதாரணமாகத் தென்படுகின்றது.

பின்னர் சீவகன், தன் தானை வீரர்களின் உள்ளத்தில் பகை வெறி ஊட்டுதற்கு மிக மிக நயமாக,

"சஞ்சலம் எய்துவோர்
 உண்டெனிற் சாற்றுமின்
மானமோ டவரையிம்
 மாநக ரதனுள்
சேமமாய் இன்றிருத்தி
 டுவம்; திண்ணம்,
உத்தம மாதர்கள்
 உண்டுமற் றுங்கே
எத்தனையோபேர்
 இவர்க்கவர் துணையாம்"

என்று கூறுகின்றான்.

"வளை சூடும் வனிதையடரிம் துணை போகும் துரும்புகள் யார் இங்கே உளர்?" என்று கேட்கும் முகத்தான், பாண்டி வீரரின் பகைக் கனலைத் தூண்டிவிடுகிறான் சீவகன். படிக்கும் நமக்கே வீர உணர்ச்சி கிளர்ந்தெழுகிறது.

ஆனால் சுந்தரனாரின் சுவட்டிலே வந்து நின்று பாடிய பாரதி, அதையே வேறு சொற்களில்,

"ஆரியத் தன்மை
 அற்றிடுஞ் சிறுவர்
யாவெண் உளரவர்
 யாண்டேனும் ஒழிக!
சோதரர் தம்மைத்
 துரோகிகள் அழிப்ப
மாதரார் நலத்தின்
 மகிழ்பவர் மகிழ்க"

என்கிறார். இவ்வடிகளில் புதுமை என்னும் பொருளைத் துருவித்துருவிப் பார்த்தாலும் அணுவளவும் கிடைக்கவில்லை!

இதுபோல் பாரதியைப்பற்றி எத்தனையோ எடுத்துக் காட்டுகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

"புதுமைக் கவி பாரதி, கவிதையோடு பிறந்தார்; கவிதைத் துறையை அறிமுகப்படுத்தினார்; கவிதையோடு 'அமர'ராகி விட்டார்" என்று கூறும் வீராதி வீரர்கள், அருள் கூர்ந்து மற்ற இலக்கிய ஆசிரியர்களின் நூல்களையும் படிக்க வேண்டும்.

பாரதி மட்டுமே சந்தக்கவி பாடினார் என்று கூறி,

"அச்சமில்லை அச்சமில்லை
 அச்சமென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து
 வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
 அச்சமென்ப தில்லையே"

என்று எல்லோரும் அறிந்த அடிகளையே, திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தால் பயனில்லை.

மனோன்மணீய ஆசிரியர், படை வீரர் நடைபோடுவதுபோல எழுதிக் காட்டும் சந்தக் கவிதையையும் எடுத்துக் காட்டிப் பாராட்ட வேண்டும்.

"அடிப்போ மடல்
 கெடுப்போ முகத்
திடிப்போம் குடல்
 எடுப்போ மிடுப்
பொடிப் போஞ்சிர
 முடைப்போம் பொடி
பொடிப்போம் வசை
 துடைப்போ முயிர்
குடிப்போம் வழி
 தடுப்போம் பழி
முடிப்போ மினி
 நடப்போம் நொடி!"

என்று சுந்தரனாரின் எழுதுகோல் வடித்துக் காட்டும் திறனையும் பாராட்டுவதுதான் நியாயமாகும்; அவர்கள் தாம், மனச்சான்று உள்ளவர்கள் ஆவார்கள்!

இதை விட்டு தமக்கு வேண்டிய வரை மட்டுமே அமரகவி யாக்குவதும், வேண்டாதவரைப்பற்றி ஒரு சொல்லும் செலவிடாதிருப்பதும் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு இழைக்கப்படும் பெருந் துரோகம் ஆகும்.

உண்மையில் தமிழிலக்கியம் ஏற்றம் பெறப் பாடுபடுவோர் எல்லாக் கவிஞரையும் ஒருங்கே வைத்துப் போற்றத்தான் செய்வார்கள். ஒரே ஒரு கவிஞரைமட்டும் உறவுபடுத்திக் கொண்டு அவரையே உயர்த்திக் காட்டி, மற்றவரை மறந்தும், மறைத்தும் விடுகின்ற போலி எழுத்தாளர்கள் மனந்திருந்த வேண்டும். அப்போதுதான் தமிழிலக்கியக் காட்டின் மணம் தரணியெங்கும் பரவ முடியும்!

—கா. வேழவேந்தன்.

ராஜபால் பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்

ஏஜ: உ. சங்குபின் ஸொ, திண்டுக்கல்ரோடு, மதுரை.



தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளிலும், தபால்மூலமும் 1000-க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே, மண்ணடி, சென்னை - 1.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாகத் திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்திசெய்து

7-10-'59-ந் தேதி

வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்

10-10-'59-ந் தேதி

முதற்கொண்டு தொடந்து அனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்-சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவனவாக இருக்கும்" எனில், மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு: (1) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (2) ஆதாரப்பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம். (3) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பிரிவு பிரிவாகப் பயிற்சியளிக்கப்படும். (4) இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும் எட்டு நயே பைசே (8 புதிய காசுகள்) தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

சிலப்பதிகாரத்தில் வெண்பா

"மெய்யிற் பொடியும்
விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும்
கண்ணீரும் - வையைக்கோன்
கண்டளவே தோற்றான் அக்
காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்"

—என்பது கற்பரசி கண்ணகியின் நிலையைக் காட்டும். இது சிலப்பதிகாரத்தில் காணப்பெறும் ஒரு வெண்பா. இவ்வெண்பாவுக்கும், இது போன்ற சில சிலப்பதிகாரக் காதைகளின்கீழ்க் காணப்பெறும் வெண்பாக்களுக்கும், இளங்கோ அடிகட்கும் தொடர்பு உண்டா? என்பதையே ஆய்வாகக் கொள்வோம்.

மேலே காணப்பெறும் வெண்பா சிலம்பில் வழக்குரை காதையில், இறுதியில் காட்டப்பட்டதொன்றாகும். "கண்ணகி கணவனை இழந்தோளாய், அவனுடைய குருதிபடிந்த கறை படிந்த மேனியைக் கையால் தொட்டுப் புரண்டமையால் தூசு படிந்தோளாய், நீர் ஒழுகும் கண்ணினளாய், காலையில் கணவனால் வாரி முடித்து மலர் வைக்கப்பட்ட குழல் மாலையில் மாலையிழந்தவளாய் மாறியமையால் விரிந்த குழலுடையோளாய் 'தன் கணவன் தவறுடைய னல்லன்' என்பதைக் காட்டுதற்கு மன்னவன் முன் வருகின்றாள். கண்ணகியின் தோற்றத்தைக் கண்டு அத்தோற்றத்தால் திடுக்கிட்ட மன்னவனுடைய மனம் தோற்றது; பின் கண்ணகியின் சொற்கேட்டு எஞ்சிய உயிரும் அவள்முன் தோற்றது"— இதுவே மேலே கண்ட வெண்பாவின் கருவாய் அமைந்த கருத்தாகும்.

இக்கருத்து இளங்கோ அடிகளால் இயம்பப் பெற்றிருக்குமா? அவரது வழக்குரை காதைக்கு முரண்பட அமைகின்ற இவ்வெண்பா அவராலேயே பாடப்பட்டிருக்குமா? என்பதைச் சிந்திக்கவேண்டும்.

கையில் தனிச் சிலம்பேந்திய கற்பின் செல்வி கண்ணகி நல்லாள் தன் கணவன் கள்வனல்லன் என்று கூறுதற்குக் கண்ணீர் உடையாளாய் காவலன்மூலம் கோயில் புகுந்தனள். கடல்நீரெனக் கண்ணீரைச் சிந்துகின்ற கண்ணகியைக் கண்டான் பாண்டியன். கடமை, கண்ணியம் ஒழுங்குமுறை உணர்ந்தவனல்லவா! என்ன துயரால் இத்தகைய கொடுமை வந்துற்றதோ? என அறியும் முன்னம் அவள் யார்? என்றறிய விழைகின்றான் மன்னன்.

"நீர்வார் கண்ணை
எம்முன் வந்தோய்
யாரை யோநீ
மடக்கொடி யோயென"
(-வழக்குரைகாதை)

பாண்டியன் நேர்மையின் இருப்பிடம் என்றமையால் துயருற்ற மகளைக் கண்டு இரங்கி, "நீயாரம்மா?" என்று வினவலுற்றான்.

துன்பத்தின் எல்லையைத் தொட்டுத் துவண்ட கண்ணகி, பெருஞ் சீற்றமுடைய தெய்வம் அரற்றுவதுபோல் மழையெனச் சொற்களைக் கொட்டலுற்றாள். 'நான் கோவலன் மனைவி. வாழவேண்டி ஊழ்வினை விரட்ட உன்னகர் வந்தோம். என் காற்சிலம்பை விற்றுப் பெறும் விலை கொண்டு வாழ ஆறறிவு படைத்த மக்கள் வாழும் உன்னகர் வந்து கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி, நான்" என்று ஒரு பகுதி கூறி முடித்தாள்.

பாண்டியன் அவள் சொற்களைச் சோர்வின்றிக் காது கொடுத்துக் கேட்டான். கணவனை இழக்கப் பெற்ற எந்தப் பெண்ணுள்ளமும் இயல்பாகத் துடிக்கும்-துடிப்பால் வெடிக்கும் சொற்கள் இவை போலும்! என்று எண்ணாமல்,

"பெண்ணணங்கே,
கள்வனைக் கோறல்
கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங்
காணென"—க் கூறித் தான் முறை செய்தமை முறையுடையதே என்று விளக்கம் தருகின்றான்.

கண்ணகியின் கொடுந் தோற்றத்தைக் கண்ட அளவிலேயே "தவறி இருப்போமோ!" என்ற ஐயம் இருக்குமானால் அவன் "கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று" என்று விளக்குவானா? நரம்புதளர, நாடி - சோர, நினைவின்றி நீள் நிலத்தில் வீழ்ந்திருப்பின், இவ்வெண்பாவின் கருத்து ஒற்றுமை காட்டும்.

மேலும் கண்ணகி "நற்றிறம் படராக் கொற்கை மன்னா, என் காற்சிலம்பு, மணி உள்ளே அமைக்கப்பட்டது" என்று சான்று பகர்கின்றாள்

பாண்டியன் இச்சொற் கேட்டு மகிழ்கின்றான். காரணம் இந்தக் கூற்று மூலம் அவளே உண்மையை அறியப் போகிறாளே என்ற நல்ல எண்ணம் மேலிட "தன் தேவியின் சிலம்பு முத்துடைத்து. எனவே கண்ணகி நல்லாளே நீ உரைத்த மொழி செவ்வை நன்மொழி" என்று மாற்றம் உரைத்து முடிக்கின்றான பாண்டியன்.

இதுவரையிலும் பாண்டியன் கண்ணகியைக் கண்டோ, அவளது கடுஞ் சொற்களைக் கேட்டோ சோர்வோ, தோற்போ அடையவில்லை என்பதைத் தெள்ளிதின் அறிய முடிகின்றது.

சிலம்புதனைக் கொணர்ந்து சித்திரப் பெண்ணின்முன் வைப்ப, கடுங்கோபமுற்ற கண்ணகி சிலம்புடைக்க மன்னவன் வாய்முதல் மணி தெறித்தது.

இங்குதான் பாண்டியன், பொற்கொல்லன் சொற்கேட்டுப் பொறுப் பிழைந்தமைக்கு மனம் வருந்தி "யானோ அரசன், யானே கள்வன்" என உரைத்து, வளைந்த செங்கோலைத் தன்னுயிர் கொடுத்துச் செங்கோலாக்குகின்றான்.

ஆனால் வழக்குரை காதையின் இறுதியில் காணப்பெறும் வெண்பாவோ, கண்ணகியைப் பாண்டியன் கண்ட அளவே தவறுடையவனோ, என்ற ஐயம் கொண்டு தோற்றதாகவும் அவள் சொற்கேட்டு உடனே உயிர் நீத்ததாகவும் கூறுகின்றது. இது ஆராய்ச்சியின் இறுதியில்; வெண்பா அழகாக அமைந்தாலும் நூலாசிரியரது கருத்துக்கு முரண்பாடுபோல் அமைவதால் பொருந்தாது. எனவே இவ்வெண்பா இளங்கோ அடிகளால் இயற்றப் பெறவில்லை என்பதும், பாண்டியனின் சிறந்த நேர்மைத் திறத்திற்கு இழுக்குக் கற்பிக்க இளங்கோ விரும்பமாட்டார் என்பதும் அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வெண்பாவை வைத்துக்கொண்டு சுவை கூறி, இளங்கோ பாடினார் என்று ஆய்வு நடத்தும் அறிவுலகம் இக்கட்டுரையை ஒரு முறை உணர்ந்து படித்துப் பயன்பெறுதல் தமிழகத்துக்கு நன்மை அளிக்கும்.

-இராம. இராமநாதன்
பி. ஏ. (ஆனர்சு.)

தி. மா. மு. கழகத் தோழர்கட்கு-

புதிய பொதுச்செயலாளர் அறிவிப்பு

மாணவத் தோழர்களே!

வணக்கம். நாடெங்கும் உள்ள திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், உடனடியாகத் தலைமைக் கழகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். கிளைக் கழகம் இல்லாத கல்வி நிலையங்களில், புதிய கிளைக் கழகங்களை நிறுவ மாணவத் தோழர்கள் முயற்சி எடுக்க வேண்டுகிறேன். ஆண்டுதோறும் சனவரித் திங்களில் கழக நிர்வாகிகளைப் புதுப்பிக்க வசதி ஏற்படும் வகையில், புதிதாக அமைக்கப்படும் கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகள் 1960 டிசம்பர் வரையிலும் கல்வி நிலையங்களில் தொடர்பு உள்ளவராகத் தேர்ந்தெடுப்பது நலம்.

அமைப்பு முறைகள்

கலைக்கல்லூரிகள், தொழிற் கல்லூரிகள், தமிழ்க்கல்லூரிகள், தொழிற் பள்ளிகள் (Polytechnics) ஆகியவைகள் தனித் தனிக் கிளைக் கழகங்கள் அமைக்க உரிமை பெற்றவையாகும்.

உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் பள்ளிக்கொரு கிளைக் கழகம் அமைக்காது, ஊருக்கொரு கிளைக் கழகம் அமைத்துக் கொள்ள வேண்டும். அதாவது ஓர் ஊரில் உள்ள பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளின் மாணவர்கள் ஒன்று கூடி ஒரு கிளைக் கழகம் அமைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் நகர சபை (Municipal)களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் அனுமதி வாங்கிய பிறகு அமைக்க உரிமை உண்டு.

ஒவ்வொரு கிளைக் கழகமும் செயலாளர், பொருளாளர், துணைச் செயலாளர் பதினைந்து பேருக்கு மேற்படாத செயற்குழுவினர் ஆகியோரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த ஆண்டு, கல்வி நிலையங்கள் திறந்து சில திங்கள் கழிந்துவிட்டதால், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர்கள் இறுதி வகுப்புகளில் உள்ளவராக இல்லாமலிருப்பது நலம்.

கிளைக் கழகங்கள் அமைக்கப்பட்ட விவரத்தை உடனடியாகத் தலைமை நிலையத்திற்கு அறிவிக்கவேண்டும்.

அமைப்பு முறையைத்தலைமை நிலையத்தில் பரிசீலனை செய்த பிறகு "நம்நாடு" இதழில் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும்.

அன்பன்
எஸ். டி. சோமசுந்தரம்
பொதுச்செயலாளர், தி. மா. மு. க.,
எழிலகம், சிதம்பரம்,
1-9-59.

உண்மையை மறைக்கின்றன.

சென்னை மாநகராட்சியினர் செய்துவரும் நல்ல பல செயல்களை மறைக்க, ஊர்பேர் தெரியாத "கலகம்" ஒன்று பொல்லாத பல பொய்களைக் கிளப்பிவிட்டிருக்கிறது. "'டிராம்லை'னைத் தோண்டி எடுப்போர் அவற்றை மூடாது போட்டிருக்கின்றனரே! அந்தப் பள்ளங்கள்—குண்டு குழிகள்— போக்குவரத்துக்கும் மனிதர்களுக்கும் இடையூறாய் இருக்கின்றவே! என்ன செய்கின்றனர் மாநகராட்சியிலிருக்கும், இந்த தி மு. கழகத்தார்? நாங்களாகிலும் 'ஓட்டல் முதலாளிகள்' தரும் பணத்தை வாங்கிக் கொண்டு தொண்டை கிழியக் கத்துகிறோம். நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று கேட்கின்றனர் தகரமுரசுக் கலகத்தினர்.

"டிராம்லைன்" சிக்கலே வேடிக்கையானது. டிராம் ஓடுவது நின்ற பிறகு, அந்த இரும்புத் தண்டவாளங்களை ஐகோர்ட்டார் தம் மேற்பார்வையில் ஏலத்திற்கு விட்டனர். "பகவன்தாஸ் மோட்டர்ஸ்" என்ற நிறுவனத்தார் ஒரு தொகைக்கு ஏலத்திற்கு எடுத்தனர். அந்த ஏலத்தின்படி அந்நிறுவனத்தார், தண்டாவாளங்களைத் தோண்டியெடுத்தபின்னர், அவர்களே "ஐவேஸ் சீப் இன்ஜினியர்" மேற்பார்வையில் பாதையை மூடிச் செம்மை செய்து தரவேண்டும் என்ற விதி செய்யப்பட்டது. அப்போது மாநகராட்சியிலிருந்த காங்கிரசார் இப்படித் திட்டம் செய்யவும், அன்று மாநகராட்சி உறுப்பினர்களாயிருந்த நம் தோழர்கள் அ. பொ. அரசும் வி. முனுசாமியும் எதிர்த்தனர்; மாநகராட்சியே தன் பொறுப்பில் அப்பாதைகளைச் செம்மை செய்ய வேண்டுமென்றனர். ஏனோ, **அன்று பகவான் தாஸ் மோட்டார்சே**, செம்மை செய்ய வேண்டும் என்று ஒப்புக்கொண்ட காங்கிரசாரும் அவர்களின் கைக்கூலியும், இன்று "கழகத்து மாநகராட்சியினர் பாதையைச் செம்மை செய்யவில்லை!" என்று பழி தூற்றுகின்றனர். இவ்வளவுக்கும், வரிசையாகப் பாதையைச் செம்மை செய்து வருகினறனர், ஏலம் எடுத்தோர்; ஏறத்தாழ முக்கால்வாசி வேலை முடிந்துவிட்டது. இருந்தும் "பெற்ற கூலி"க்குச் சில கத்துகின்றன; உண்மையை மறைக்கின்றன.

நடந்ததை அறிவீர் நாட்டோரே!

ஆசிரியர் **கண்ணதாசன்** சுற்றுப்பயணத்தில் இருப்பதால் **"ஐயம் அகற்று"** அடுத்த இதழில் வரும்.

★

திரு. இராம. இராமநாதன் அவர்கள் தில்லிக்குச் சென்றிருப்பதால் இவ்விதழில் **"தொல்காப்பியச் சுவை"** இடம்பெற இயலவில்லை.

இந்தக் காட்சி இனிக் கிடைக்குமா?



கொழும்பில் வீட்டுக் காவல் முடிந்து விடுதலையானதும் யாழ்ப்பாணம் திரும்பிய திரு. வன்னியசிங்கம் எம். பி. அவர்கள், (இடமிருந்து இரண்டாவதாய் நிற்பவர்) விமான நிலையத்தில் ஆரத்தி எடுத்து வரவேற்கப்பட்டார். இடதுபுறம் நின்று ஆரத்தி எடுப்பவர்தான் திருமதி வன்னியசிங்கம். இப்படி வரவேற்று மகிழ்ந்த உள்ளங்கள்தான் இன்று வாடிக் கிடக்கின்றன.

இவர்களைப் பற்றிய குறிப்பை 7-ம் பக்கம் காண்க.

புகைப்படம்: திரு. ஈழத்தரசன்.

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

காலைக்கதிரவன் தோன்றுதல் போல்
அதிகாலை எழுந்திடுவான் — பசுஞ்
சோலையில் பூத்திடும் மாமலர்போல்
உளம்தாய்மையுற மகிழ்வான் — எந்த
வேலையிலும் தனி வீரனெனப் புகழ்
வேண்டுவதே நினைவான் — குறள்
நூலையேகற்று அறநெறி நின்றுநல்
நுண்பொருள்கள் தருவான்.

தங்க நிலவெனத் தோற்றுவான் — இருள்
தான் கெட நல்லொளிர் ஏற்றுவான்
எங்கள் தமிழ்க்கவி பாடுவான் — வீட்டு
இன்பம் என அதை நாடுவான்
தென்றலென மகிழ்ந்தாடுவான் — நன்மை
செய்வதிலே யுளம் கூடுவான்
அன்புருவான நற்றந்தையே — இன்பம்
ஆக்கும் குறள்நெறித் தந்தையாம்.

முத்தும் பவழமதும் முறையே தொடுத்தாற்போல்
தித்திக்கும் தேன்தமிழில் சிந்தைகவர் பாப்புனைந்தேன்
முத்திக் கரும்பாம் நல்முத்தமிழின் இன்பமதை
சித்தத்து வைத்துச் சிறந்துமிளிர் சான்றோரே!!
இத்துணைய பேரின்பம் என்றுமே யாம்கண்டதில்லை
இத்துணைக்கும் நற்றுணையாய் இயங்கு குறட்கழகம்
எத்திசையும் போற்ற எழிலார் பணிபுரிந்து
நித்தியமாய் வாழ நினைந்து விடைபெறுகின்றேன்.

இக்கவிதையை அரங்கேற்றியவர் திரு. அன்பு அருணசலம். அடுத்த இதழில் திரு. நாவுக்கரசன் அரங்கேற்றிய கவிதை வரும்.

"தென்றல்"

(நாளிதழ்)

★

துணையாசிரியர்கள் தேவை.

நாளிதழ்களில் பணியாற்றிப் பழக்கப்பட்டோர் விண்ணப்பிக்க.

"தென்றல்" ★ சென்னை - 6.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு